# "அபிநய லாவண்யா" நாட்டிய நிகழ்வு

## வெள்ளி விழா

## சிறப்பு மலர் - 2017



**இராஜரெட்ணம் நடனாலயம்**

திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருகோணமலை

# இராஜரெட்ணம் நடனாலயம்

வழங்கும்

# வெள்ளி விழா

# அபிநய லாவண்யா



# நாட்டிய நிகழ்வு - 2017

**28.01.2017 மாலை 4.30 மணி**

**தி/விவேகானந்தா கல்லூரி, கேட்போர் கூடம்.**

**உவர்மலை, திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீணைக் கொடியுடையோன் வீற்றிருந்த
கோணை நகர் வளங்கள் சூழ
தேன் பாயும் நதி விழுந்து இரு போகம்
விளையும் பசும் வயல் வெளிகள்
மீன் பாடும் குரைகடலில் வெள்ளியலை
துள்ளிவிழும் மலைத்தொடர்கள்
வானுயர்ந்த மறை பொழிந்து சம்பந்தர்
பதிகம் பெறு தென்கயிலைப் பூமியிதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜரெட்ணம் நடனாலய மன்ற நிர்வாகிகள்



திரு. R.C.J.A. செல்வபுத்திரன் (தலைவர்), திரு. இ.மகேந்திரராஜா (உப தலைவர்), திருமதி. ரே.செல்வபுத்திரன் (செயலாளர்),
திருமதி. வி.குலேந்திரகுமார் (உப செயலாளர்), திருமதி. கீ.ஈஸ்வரன் (பொருளாளர்)
நிர்வாக உறுப்பினர்கள்: திருமதி. ஜீ.திருச்செல்வம், திருமதி. சு.முரளிதரன், திருமதி. இ.மகேந்திரராஜா,
திருமதி. ம.புண்ணியராஜா, திருமதி. ந.சிவகுமார், திருமதி.து.காண்டீபன், திரு. ச.மதியழகன்

## இராஜரெட்ணம் நடனாலய மன்ற செயற்குழு உறுப்பினர்கள்



திரு. R.C.J.A. செல்வபுத்திரன், திரு. இ.மகேந்திரராஜா, திருமதி. ரே.செல்வபுத்திரன், திருமதி. வி.குலேந்திரகுமார்,
திருமதி. கீ.ஈஸ்வரன், திரு. ச. மதியழகன், திரு.சி.லக்ஸ்மேந்திரன், திருமதி. பு.தங்கராஸ், திருமதி.ஆ.தனச்செல்வி,
திருமதி. நி.பாஸ்கரன், திருமதி.சு.கமலநாதன், திருமதி.கா.தவரூபன், திருமதி.தி.மேரிபிரகாஷினி,
திருமதி. பா.குமாரராஜா, திருமதி. கு.புஸ்கரன், திருமதி. சி.சந்திரவதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



திரு. இ.மகேந்திரராஜா



திரு. இராம.பிரசாந்



திரு. சு.குலேந்திரகுமார்



திருமதி. ரே.செல்வபுத்திரன்
இதழாசிரியர்



திரு. தி.குமாரராஜா



திரு. கி.ஈஸ்வரன்



திரு. R.C.J.A. செல்வபுத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாயும் தந்தையும் பிறந்த பூமியும்
சொர்க்கத்தை விடச் சிறந்தவை

'என் கடன் பணி செய்து கிடப்பதே'
கலைகள் நிறைந்த இந்த உலகத்திலே கண்கவர் கலையாம்
நாட்டியக் கலையில் ஈடுபடுத்தி ஆக்கமும் ஊக்கமும்
வழங்கிய எனது தாய்க்கும், தந்தைக்கும்
எனது குரு சமஸ்கிருதப் பேராசிரியர்
அமரர். கலாநிதி. வி.சிவசாமி
அவர்கட்கும்

# "அபிநய லாவண்யா"




## சமர்ப்பணம்



நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி
இசை நடன நவரத்னா, அபிநய ஆசான்
திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன்
இராஜரெட்ணம் நடனாலய ஸ்தாபகர்,
திருகோணமலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்று, இன்று, நாளை

"வீணைக் கொடியுடையோன்
வீற்றிருந்த கோணைநகர் வளங்கள் சூழ
தேன் பாயும் நதி விழுந்து இரு போகம்
விளையும் பசும் வயல் வெளிகள்
மீன் பாடும் குரைகடலில் வெள்ளி அலை
துள்ளி விழும் மலைத் தொடர்கள்
வானுயர்ந்த மறை பொழிந்து
சம்பந்தர் பதிகம் பெற தென்கயிலை பூமியிதாம்"

இதில் எமது 25வது அகவையை நிறைவு கொள்ளும் இராஜரெட்ணம் நடனாலயம் இதே காலப்பகுதிகளில் திருக்கோணநாதப் பெருமானின் திருவருளினால் பல பட்டங்களையும், பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டது என்பதை கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பரத முனிவரால் உயிர் கொடுக்கப்பட்ட இந்தக் கலை இன்று எம்மைப் போன்ற கலைஞர்களின் அயராத உழைப்பிலும் உங்களைப் போன்ற ரசிகர்களின் கலை ஆர்வத்திலும் சுவாசித்துக் கொண்டிருக்கின்றது.

இரண்டரை தசாப்த காலங்கள் என்பது ஒரு நிறுவன வளர்ச்சியை அதுவும் ஒரு கலைக்கூடத்தை பொறுத்த மட்டில் சாதாரண விடயமல்ல. இந்த வளர்ச்சியில் என்னைக் காட்டிலும் பலருக்கு பெரும் பங்குண்டு.

குறிப்பாக என் தந்தையார் அவரைப் பற்றி சிறு குறிப்பை கூறுவதாயின் நாட்டிய நாடகம், இசை (ஆர்மோனியம்) போன்ற கலைகளில் மிகுந்த ஆர்வமுள்ள ஒரு உயர் நிலை மனிதர் அவர். தனது கடைசி மகளான என் மூலம் தன் அபிலாசைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஒரு பரத நாட்டிய ஆசிரியர் தகுதிக்கான கல்வி கற்பதற்கு அனைத்து வசதிகளையும் அளித்து எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் என்னை ஊக்கப்படுத்தியவர்.

ஊக்க மருந்து என் தந்தையென்றால் அதனை வழங்கிய மருத்துவர் என் தாயார். என் வாழ்வாதாரங்கள் அனைத்துக்கும் மூலம். பல இன்னல்களும் இடர்பாடுகளுக்குமிடையே என்னை இளம் கலைஞராக உயர்த்திப் பார்க்க விரும்பியவர். நான் கற்ற பரதத்திற்கு தில்லையம்பல நடராஜர் உகந்தவராக இருக்கலாம். ஆனால் அந்த பரதம் என்னையும் ஆட்கொள்வதற்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் அவர்களே. அவர்களின் கனவும் இறையருளும் ஒன்று கூடவே பரதநாட்டிய கலையை முறையாகப் பயின்று பல பயிற்சிகளையும் பட்டங்களையும் பெற்றுக் கொண்டு சிறந்த நடன ஆசிரியராகத் திகழ்வதற்கும் அதன் மூலம் வரும் கால சந்ததியினரை பரத நாட்டிய கலைஞர்களாக உருவாக்குவதற்கு அவர்களின் நினைவாக என் தந்தையின் பெயர் கொண்ட இராஜரெட்ணம் நடனாலயத்தை 1991ல் நிறுவ முடிந்தது.

இன்று உலகெங்கும் பரந்து வாழும் பல நாட்டியக் கலைஞர்களின் கருவறைக் கூடமாக இராஜரெட்ணம் நடனாலயம் அமைந்திருந்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நாம் அடைந்து கொண்ட இந்த உயர்வு நான் முன்ரே கூறியது போல ஒரு தனி நபரின் ஏகோபித்த முயற்சியல்ல. பிரபல பாமரக் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சொன்னது போல

"ஆடற்கலைக்கு அழகு
உடல் அமைப்பு இன்னும்
அகத்தின் நிலை விளங்கும் முகக்குறிப்பு
பாடற் கலைக்கு அழகு
இசையமைப்பு - கலை
பலர் உழைப்பால் வளரும்
பொதுப் படைப்பு"

இதுவும் பலரின் உழைப்பால் உருவாக்கப்பட்ட பொதுப் படைப்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எனது குருநாதர்கள் என் கணவர், என் சகோதர சகோதரிகள், மருமக்கள், அண்ணிமார்கள், மைத்துனர்கள், மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மேலும் நம் தேசத்துக் கலைஞர்கள் என அனைவரும் ஒரு குடும்பமாக உழைத்திருக்கிறார்கள் என்பதே நிதர்சனம்.

"ஆயிரம் பிறை காண்பவன் ஆயுட்கால பாக்கியசாலி" என்பது போல பல நூற்றுக் கணக்கான மேடைகளையும் அரங்கேற்றங்களையும், ஆயிரக் கணக்கான கலைஞர்களையும் உருவாக்கிய எமது நிறுவனத்தை எதற்கு நிகராக ஒப்பிட முடியும்.

இந்த உயர்விற்கு மகுடம் சூட்டுவது போல எமது வாழ்நாட்களில் அமைந்த நிகழ்வுகள் மூன்று. இதில் ஒன்று எமது 18வது ஆண்டு அகவை நிகழ்வினை "அபிநய சாதனா" எனப் பெயரிட்டு கடந்த 2009ம் ஆண்டில் பல கலைஞர்களை அழைத்து வெற்றிகரமாக நிகழ்த்தினோம்.

இரண்டு எம் சரித்திர புருஷரான திருக்கோணேசப்பெருமானின் வரலாற்றினை "தென்கயிலை வாசா" என்ற நாட்டிய நாடகமாக 2014ம் ஆண்டில் அரங்கேற்றி நாமும் பெருமை கொண்டோம். மூன்று இன்று உங்கள் முன்னே படைக்கப்பட்டிருக்கும் இந்த அறுசுவை விருந்து. இந்த நிகழ்வுகளின் வெற்றியே எனக்கும் எம் நிறுவனத்திற்கும், மாணவர்களுக்கும் கிடைக்கப் பெற்ற அதி உயர்வான விருதுகள் ஆகும். என்னைக் கேட்டால் அவை அந்த "ஆஸ்கார் மற்றும் நோபல்" விருதுகளைக் காட்டிலும் மேன்மையானதே.

பரதத்தை பரதமாக கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்கின்ற ஆர்வமும் என் குருநாதர்கள் எனக்கு பயில்வித்த கலையினை அதன் விழுமியங்களோடு ஒருசத விகிதமேனும் பிசகாமல் பரிமாறிக் கொடுக்க வேண்டும் என்ற அபிலாசையும் தான் என்னையும் என் நிறுவனத்தையும் இன்று வரை இயக்கிக் கொண்டிருக்கின்றது.

நாம் வாழங்கும் அனைத்துக் கலைநிகழ்ச்சிகளிலும் பரதம் உயிரோட்டமாக இருப்பதற்கும் எம் நடன நெறியாள்கைகள், (**Group Formation, Timing, Costume Design**) ஒழுங்கு முறைகள், நேரம், ஆடையலங்காரம் (**Facial Expressions**) முகபாவங்கள் என்பன பரவலாக பேசப்படுவதற்கு இதுவே காரணம்.

அதன் காரணமாகவே பரதநாட்டியம் சார்ந்தநிகழ்வுகளான
"அரச நடனவிழா"
சக்தி (தொலைக்காட்சி) கிளாசிக்கள் டான்ஸ்
கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்ட எழுவானில் நடனம்
மேலும் சர்வதேச ரீதியில் நடாத்தப்பட்ட "ஜெயாஞ்சலி"
போட்டிகளில் எமது முத்திரைகளை ஆணித்தரமாக பதிக்க முடிந்தது.

இன்று இருபத்தைந்தாவது வெள்ளிவிழாக் காணும் இராஜரெட்ணம் நடனாலயம் தான் கடந்து வந்த பாதையில் நாம் சாதித்த சாதனைகளை மீட்டிப் பார்ப்பதன் மூலம் மீண்டும் சாதிப்போம், சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்குகின்றது. இவை வைர விழாவிற்கும் வழி கோலும் என்ற நம்பிக்கையுடன் அந்த திருக்கோணேஸ்வரப் பெருமான் பாதம் பணிந்து எனது பணியை உவப்புடன் தொடர விரும்புகின்றேன்.

நன்றி

நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி,
திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
இராஜரெட்ணம் நடனாலயம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி


## DIOCESE OF TRINCOMALEE

**Rt. Rev. Dr.Christian Noel Emmanuel**
**Bishop of Trincomalee.**

Bishop's House,
Orr's Hill, Trincomalee,
Srilanka.
Tel: +94 26 2222677, Fax: +94 26 2223238
Email: bishoptrincomalee@gmail.com.


25 ஆண்டுகளை நிறைவு செய்யும் இராஜரெட்ணம் நடனாலயாவின் வளர்ச்சி குறித்து பெருமிதத்துடன் பாராட்ட கிடைத்த சந்தர்ப்பத்திற்காக மகிழ்கிறேன். திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் தனது கல்வி, ஆற்றல்கள், அனுபவத்தைப் பயன்படுத்தி இந்த நடனாலயாவை வளர்த்து வருகிறார். இவரது முதிர்ந்த அனபவத்தால் பல மாணவர்கள் பயிற்சி பெற்றும் பல சாதனைகளைப் படைத்தும் உள்ளனர் என அறியும் போது அது தமிழ் சமூகத்திற்கே பெருமை சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது.

தற்போது எண்பதிற்கும் அதிகமான மாணவர்கள் இராஜரெட்ணம் நடனாலயாவில் கற்கிறார்கள் என்றால் இந்த நடனாலயாவின் மூலம் கடந்த 25 வருடங்களாக பல நூறு மாணவர்கள் பயனடைந்திருப்பார்கள். இக்காலத்தில் மாகாண, தேசிய, சர்வதேச மட்டங்களில் நடாத்தப்பட்ட பரீட்சைகளிலும் போட்டிகளிலும் சித்தி, முதல்தர சித்தி என விருதுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளமை இதற்குச் சிறந்த சான்றாகும். அத்தோடு திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் தனது அயராத உழைப்பினால் நாட்டியக் கலை மாணவர்களை உருவாக்கியதோடு "நாட்டிய சாதனையாளர்", "சிறந்த சாதனையாளர்" "ஜெயாஞ்சலி" எனும் விருதுகளையும் பெற்றுள்ளார். இது அவருக்கும் திருகோணமலை மண்ணுக்கும், தமிழ் பேசும் நல் உலகிற்கும் பெருமை சேர்க்கும் சாதனையாகும்.

கலை, கலாச்சாரம், பாரம்பரியம், முறையான பாஷை அருகி வருகின்ற இக்காலத்தில் தமிழ் கலையை வளர்க்க வேண்டுமென விரும்பி கற்போரும், கற்பிப்போரும் இன்றும் உள்ளனர் என எண்ணும் போது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இராஜரெட்ணம் நடனாலயம் தொடர்ந்து வளர வேண்டும், மேலும் பலகலைஞர்களைஉருவாக்க வேண்டும், பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். விசேடமாக நடனக் கலை இறைவனால் தனக்குக் கொடுக்கப்பட்ட சிறந்த கொடையாகவும் ஆசீராகவும் கருதி அதை வளர்த்து, சிறந்த ஆசானாக இளம் சமூகத்திற்குக் கற்றுத் தரும் ஆசிரியை திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரனை சிறப்பாக வாழ்த்துகிறேன்.

எமது பாரம்பரியம், பாரம்பரியக் கலை, கலாச்சாரம் அழிய விடக் கூடாது, அவற்றைக் கட்டிக் காக்க சமூகம் பாடுபட வேண்டும். வளரும் கலைஞரையும் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டுமென்பது எமது விருப்பமாகும். அதற்கு சிறந்த தளமாக இராஜரரெட்ணம் நடனாலயம் அமைந்துள்ளது. இது மேலும் வளர வேண்டும், சமூகத்திற்குக் கலங்கரை விளக்காகத் திகழ வேண்டுமென வாழ்த்தி நிற்கிறேன்.

+ Ch. Emmanuel

பேரருட்திரு **கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

"All things to all people"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருகோணமலையில் கடந்த இருபத்தைந்து வருடங்களாக, தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான நடனக் கலையில் தன்னை முற்றாக ஈடுபடுத்தி, நடனக் கலையினை மேலோங்க வளர்த்து மேன்மைப்படுத்திய கலைமாமணி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது நடனக் கலைப் பணியின் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இயல்,இசை,நாடகம் என்ற மூன்று தமிழும் ஒருங்கிணையும் நடனக்கலை நெடுங்கால வரலாற்றைக் கொண்டதாகும். அக்கலை தமிழர்தம் பண்பாட்டையும், கலை, கலாச்சார விழுமியங்களையும் வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றது. இக் கலையானது மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். இக்கலை பரந்துபட்ட விரிவான பரப்புடையது. இத்தகு சிறப்புக் கொண்ட நடனக் கலை வேதகாலம் தொட்டு வளர்ச்சியுற்று வந்ததை வேதகால நூல்களின் மூலம் அறிய முடிகின்றது. புராணக்கதைகள் மட்டுமல்ல. சமகால வாழ்க்கை முறைகளையும் வெளிக்கொணரும் வகையில் வடிவமைக்கப்பட்டு கண், காது , கருத்து இவைகளுக்கு விருந்தாகப் படைக்கப்படுவது இந்த நடனக் கலையாகும். இது மக்களை இலகுவாக ஈர்க்க கூடிய ஒரு கலைவடிவமாகும்.

இத்தகைய சிறப்புமிகு நடனக் கலையின் ஊடாக தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளைப் பக்குவமாக வளர்த்தெடுத்து, பாதுகாத்து தமிழர்தம் இல்லிடத்தை உறுதிப்படுத்தும் இவரது கலைப்பணி எதிர்கால தமிழர்களின் வரலாற்று ஆவணமாக அமையும் என்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

இவரது மாணவிகளது பல கலை நிகழ்வுகளை எமது தொன்மைமிகு ஆலயங்களிலும் வேறு பல மேடை நிகழ்ச்சிகளிலும் கண்டு மகிழ்ந்துள்ளேன். இராஜரெட்ண நடனாலய தாபகரான, வெள்ளிவிழா நாயகி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களைப் பல தடவைகள் வாழ்த்தியுள்ளேன், பாராட்டி மகிழ்ந்துள்ளேன். அந்த வகையில் அவரது நடனக் கலைப் பணியின் இருபத்தைந்து வருட நிறைவாக வெளிவரும் வெள்ளிவிழா மலரிலும் எனது பதிவுகளை மேற்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளமையையிட்டு மகிழ்வெய்துகின்றேன்.

நீண்டகாலமாக நடனக் கலைப்பணியாற்றி வரும் இராஜரெட்ணம் நடனாலயம் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டுமெனவும் அதனூடாக திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது பணி தொடர்ந்து சிறக்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல கோணேஸ்வரப் பெருமானையும், பத்திரகாளி அம்பாளையும் இறைஞ்சுவதுடன், எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**இரா. சம்பந்தன்**
பாராளுமன்ற உறுப்பினர்
எதிர்க்கட்சித் தலைவர்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு.

**பல்வேறு கலைச்சுவை உணர்வுள்ள அனைவருக்கும்
ஒரே நேரத்தில் இன்பம் பயக்க வல்லது நாட்டியமே**
**- காளிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருகோணமலை மண்ணில் நடனக் கலையினைச் சிறப்புடன் வளர்த்துத் தனக்கென ஒரு தனிச் சிறப்பிடத்தைப் பெற்று மிளிரும் இராஜரெட்ணம் நடனாலயம் வெள்ளிவிழா காணவிருப்பதையும், அதனையொட்டி சிறப்பிதழ் ஒன்று வெளிவருவதையும் அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ் நடனாலயத்தினுடைய உயிர் நாடி திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள் பரத நாட்டியத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர். யாழ் பல்கலைக்கழகத்தில் கற்று கலைப் பட்டதாரியான இவர் பட்டப்படிப்பின் பின்னும் கல்வி டிப்ளோமா பட்டத்தினையும் இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தில் பெற்றுக் கொண்டவர். அத்துடன் நடனக்கலையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும், அதற்கு மேலாக பரதம் வளர்ந்த இந்தியாவிலே கற்றுக்கொண்டவர்.

நடன ஆசிரியராகவும், நடனக் கல்வி ஆசிரியருக்கான ஆலோசக விரிவுரையாளராகவும் 31 வருடங்களுக்கு மேலாக நற்சேவையாற்றி மாணவ, ஆசிரியர்களின் உள்ளங்களிலும், கலையுலகிலும் நன் மதிப்பைப் பெற்றுக்கொண்டவர்.

தமிழர் பண்பாட்டிலும் அவர்தம் கலையிலும் பற்று கொண்டு தன்னை இத்துறையில் வளர்த்தெடுத்த தனது அருமைத் தந்தையார் அமரர் மதிப்புக்குரிய இராஜரெட்ணம் அவர்களின் நினைவாக 1991ம் ஆண்டு இராஜரெட்ணம் நடனாலயத்தை நிறுவி அதன் மூலமாக இக்கலையை வளர்த்து திருகோணமலை மாவட்டத்திலும், அகில இலங்கையிலும் பல வெற்றிச் சாதனைகளைப் பெற வழிவகுத்தவர்.

"நாட்டிய வித்தகி", "நாட்டியக் கலைமணி", "அபிநய ஆசான்" போன்ற பல சிறப்புப் பட்டங்களையும் பெற்ற நாட்டியப் பேரரசி, அவருடைய சேவையும் இராஜரெட்ணம் நடனாலயத்தினுடைய கலைப்பணியும் பிரித்து நோக்க முடியாது சங்கமமாகி இருப்பது பெருமைக்குரியது.

நடனாலயத்துனுடய கலைப்பணியும் அதன் ஸ்தாபகர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் கலைத்தொண்டும் மென்மேலும் வளர்ந்து கலைப்பணி தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மனமார வாழ்த்துகின்றேன்.

வெள்ளி விழா கலை வாழ்வில்
அவரது வெற்றி விழா
பல வெற்றிகளை
மீட்டுத்தரும் சாதனை படைத்த
பெருவிழா தொடர்ந்தும்
ஒளி விழாவாக மலரவேண்டுமென
மனதார வாழ்த்துகிறேன்.

**க. துரைரெட்ணசிங்கம்**
நாடாளுமன்ற உறுப்பினர்
(தேசிய பட்டியல்)

**ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் மிகச் சிறப்பானதும் இன, மத, மொழி பேதமின்றி எல்லோரையும் கவரக் கூடியதுமான கலை பரதமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஒரு கலைத்தாய் பெரும் முயற்சி கொண்டு உருவாக்கி, கருவிலிருந்து கல்லறை வரைக்குமான ஒரு கலைப் பாரம்பரியத்தை அரங்கேற்றி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுறும் இவ்விழாவின் சிறப்பு மலருக்கு வாழ்த்து வழங்குவதில் வரம் பெற்றவனாகின்றேன்.

தெய்வத்தின் அருட்கடாட்சம் பெற்ற தேவியரில் ரேணுகாதேவியும் ஒருவர். நாட்டியக்கலை வரலாற்றின் பல அத்தியாயங்களைத் தன்பொற்பாதத்தின் அசைவுகளால் எழுதிய பெருமை மட்டுமல்ல, அவற்றின் இலக்கணமாய் தன் போதனை மூலம் பல நூறு சாதனை நாயகிகளை உருவாக்கிய பெருமையும் இவருக்கேயுண்டு.

ஒரு குழுவின் சாதனை அவரால் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சாதனையாளர்களால் அளவீடு செய்யப்படல் வேண்டும், எனும் கொள்கையில் நான் வலுவான நம்பிக்கை கொண்டவன். அந்த வகையில் திருமலையில் திருநடனம் புரியும் இளம் நடனக் கலைஞர்கள் காட்டும் வர்ணஜாலம் தொடராகக் குவியும் விருதுகள் என்பன இம் மாமேதையின் திறமைக்குச் சான்றாகும்.

இருபத்தைந்து ஆண்டுகள் ஒரு பல்கலைக்கழகத்தைப் போல் பாதுகாத்தும் பெருமை கொள்ளும் நடனாலயத்தை சற்றும் சாரம் குன்றாமல் கம்பீரமாய் நிலைக்க வைப்பதென்பது இனிவரும் காலங்களில் நிகழ்த்த முடியாத, வரலாறு வியக்கும் சாதனையாகும்.

கட்டியெழுப்புவது கடினம். கட்டியெழுப்பியதைக் கட்டிக் காப்பது அதை விடக் கடினம். ஆனால் கடினத்தையும் தனது வாரிசுகளால் சுலபமாய்ச் சாதித்து சரித்திர நாயகியாக வலம் வருபவர் நிலை வைத்துப் பெருமை கொள்ளும் தகுநிலை கொண்டவர் நாட்டிய கலைமணி ரேணுகாதேவி அவர்கள்.

“கலைஞனின் கனவு” முதல் “தென்கயிலை வாசா” வரை ரேணுகாதேவி எனும் இக் “கலைத்தென்றல்” மேற்கொண்ட கலைப் பயணத்தின் மைல் கற்கள் காலத்தால் அழிக்க முடியாத, வரலாறு வாஞ்சையுடன் வாங்கிப் பொக்கிஷமாய்ப் பாதுகாக்க வேண்டிய விலைமதிக்க முடியாத பாத ஜால வித்தைகளாகும்.

சிவபெருமானின் சிறப்பினையும், அருட்கடாட்சத்தின் அளவு கோலிலையும் அற்புதமாய் விபரிக்கும் “ஹரிஹராத்மஜ தேவாஷ்டகம்” எனும் பாமாலையினை “ஹரிவராசனமா” கவும், சிவரின் சக்தியை வெளிப்படுத்தும் “சிவாம்ருதம்” எனும் ஸ்தோத்திரத்தை சிவலோகத்தின் மறுமதிப்பாய் உருவாக்கி இறைவனிடத்தில் பெரும் பாக்கியம் பெற்றிருக்கின்றார் நர்த்தன வித்தகி ரேணுகாதேவி.

சுத்தமான பரதநாட்டியத்தின் வித்தைகளை தன் சுய கற்பனையும் கலந்து வர்ணக் கலவையாக உருவாக்கி, இசையும் அசைவும், தாளமும் நளினமும், பாதமும் ஜதியும் அணுவளவும் பிசகாது இரண்டறக் கலந்து உருவாகும் புதுமைகளை கர்மமும் வர்ணமும் இரண்டல்ல எனும் விவேகாநந்தரின் கூற்றுக்கமைய, வாழ்வியலில் உள்ள மானிட கதாபாத்திரங்களை நாட்டிய உருப்படிகளாய் மேடையேற்றி இம்மண்ணுக்கும் இறைவனின் சந்நிதானம் உள்ள விண்ணுக்கும் பெருமை சேர்த்து சர்வதேசம் நவரச நாயகி ரேணுகாதேவி.

ரேணுகா எனும் இச் சாதனைச் சிகரத்தின் அடியில் புல்லாகவேனும் முளைத்து உச்சி நோக்கி உவகை கொள்ள வேண்டும் எனும் ரசிகர்களில் நானும் ஒருவன்.

கலைத்துவம் மிக்க மாணவச் செல்வங்களை உருவாக்கும் உங்கள் பணி பிணியின்றித் தொடர வாழ்த்துக்கள்.

**M.T.A. நிஸாம்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message of Blessing

It gives me great joy to note that **Rajaratnam Nadanalayam**, in Trincomalee, the Dance Institution has completed 25 years of valuable service and excellent performance. Mrs.Renuka Selaputhiran has formed many students to obtain honoured places at various levels in dancing through her dedicated service as a Dance Teacher. As this Institution celebrates the Silver Jubilee of its service and the release of a souvenir to mark the work of love, dedication and commitment, I congratulate Mrs.Renuka Selvaputhiran on the happy occasion.

I join her family members who supported her all these years of achievements, very specially in celebrating this event. Hence, I send my sincere greetings, blessings and wish her success for the years ahead. I appreciate greatly the generosity of the parents, past students and the society of Trincomalee for the support that has been extended to this institution for the past 25 years. During this period its progress and growth have been step by step and it has seen greater development, mainly due to the untiring efforts of Mr.&Mrs. Selvaputhiran and family who shared the same dreams.

While congratulating them I wish to reiterate that they should continue their zeal and concern towards the growth in aesthetic values in Trincomalee.

May the rich legacy of Art and Culture which you have inherited may continue to grow and flourish as you look forward to the further milestone of your journey.

I intercede God's blessings on this institution and wish them all success.

**Sr. M. Therese Ranee, A.C.**
Former Principal, St. Mary's College, Trincomalee,
Former Councillor for Education, Apostolic Carmel





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருகோணமலை மாவட்ட இராஜரெட்ணம் நடனாலயத்தின் வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

1991ம் ஆண்டு தொடக்கம் இந்த நடனாலயம் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே. நாட்டிய கலைமணி, நாட்டிய வித்தகி, இசை நடன நவரத்தினா, அபிநய ஆசான் போன்ற பல பட்டங்களைப் பெற்ற திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இராஜரெட்ணம் நடனாலயம் இன்று பெரு வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையிலும், இந்தியாவிலும் நாட்டியக் கலைக்கான பட்டப் படிப்புக்களையும், பயிற்சிகளையும் பெற்றுக்கொண்ட திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் சிறந்த ஆளுமையின் ஊடாகவும், நாட்டியக் கலையின் ஊடாகவும் இந்த நடனாலயம் வளர்ச்சி கண்டு வெள்ளி விழா கொண்டாடுவது பெருமைமிக்க ஒரு விடயமாகும்.

இவ் ஆசிரியை பாடசாலையில் நடனக் கலையினைக் கற்பிக்கும் காலத்தில் தமிழ்த்தினப் போட்டிகளில் தனி, குழு நடனங்களில் பல தங்கப் பதக்கங்களை அகில இலங்கை ரீதியாகப் பெற்றுக்கொடுத்ததுடன், மூன்று தடவை தொடர்ச்சியாக தங்கப் பதக்கம் பெற்றுக் கொடுத்தமையால் சிறந்த நடன ஆசிரியர் என்று பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் பரத நாட்டிய பாடத்திட்டம் தயாரிக்கும் கலைத்திட்ட குழு அங்கத்தவராகவும், க.பொ.த.(சா/த) செயன்முறைப் பரீட்சை பிரதான பரீட்சகராகவும், ஆசிரியர்களுக்கான முன்னிலை சேவைப் பயிற்சி நெறியின் போது நடன பாட விரிவுரையாளராகவும் கடமையாற்றியமை இவரது திறமையையும், ஆளுமையையும் வெளிக்கொண்டு வருகின்றது.

நாட்டிய கலைமணி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது சேவையைப் பாராட்டி மாண்புமிகு அமைச்சராக இருந்த அமரர் தொண்டமான் அவர்களாலும், நுவரெலியா மாவட்ட ஜெயாஞ்சலி கலை நிறுவனத்தினாலும் கௌரவிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டமையானது இவரது பெருமையை மெருகூட்டுவதாக உள்ளது.

இவர் ரூபவாஹினி, சக்தி தொலைக்காட்சி நிகழ்வுகளில் நடனத்தின் மூலமாக புதிய ஆக்கங்களை நெறிப்படுத்தியுள்ளதுடன், குறிப்பாக அகில இலங்கை ரீதியாக சக்தி **TV** நடாத்திய **'Shakthi Classical Dance Star"** 2010 போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டி விருதுச் சான்றிதழ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் பல நடன அரங்கேற்றங்களை நடனாலயத்தின் மூலம் நடாத்தியுள்ளதுடன் வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் பல மாணவர்களை முதல் தர சித்தி பெற வைத்தமை, இவரிடம் கற்ற மாணவர்கள் இலங்கையிலும், வேறு பல நாடுகளிலும் ஆசிரியர்களாகவும், மற்றும் பல துறைகளில் விற்பன்னர்களாகவும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு பட்டங்களையும், விருதுகளையும் தனதாக்கிக் கொண்ட ஆளுமை மிக்க ஆசானின் இந்த இராஜரெட்ணம் நடனாலயம் மென்மேலும் வளர்ச்சி கண்டு சாதனைகள் பல படைக்க வேண்டும் என வாழ்த்துவதோடு, வெள்ளிவிழா நிகழ்வுகள் சிறப்புற எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மா.இளஞ்செழியன்**
மேல் நீதிமன்ற நீதிபதி,
வட மாகாணம்,
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி



திருக்கோணமலையின் பிரசித்தமான நடனாலயங்களுள் ஒன்றான இராஜரெட்ணம் நடனாலயம் தனது 25வது ஆண்டு வெள்ளி விழாவினையொட்டி வெளியிடும் "அபிநய லாவண்யா" சிறப்புமலரிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கலாசாரம், பண்பாடு,பாரம்பரியம் என்பவற்றை மிகைப்படையாக வெளிப்படுத்துகின்ற உன்னதமான கலையாக பரதக்கலை விளங்குகிறது. அக் கலையினை எமது பிரதேசத்தில் சிறப்பான முறையில் வளர்த்து வருகின்ற தலைசிறந்த ஆசிரியர்களுள் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரனும் ஒருவராவார். தன்னிடம் பரதக் கலையினைப் பயிலும் மாணவர்களின் ஆற்றுகையினை கலை நிகழ்வுகள் மூலம் சமூகத்தின் மத்தியில் அரங்கேற்றி அவர்களது திறமைக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கச் செய்வது திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் ஆளுமைத் திறனாகும்.

மனிதர்களில் மறைந்து கிடக்கும் ஆன்மீகத் தன்மையை வெளிப்படுத்தும் கலை வடிவங்களுள் ஒன்றான பரதக்கலையினை எதிர்கால இளந் தலைமுறையினரும் பயின்று பயன் பெறும் வண்ணம் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் ஆற்றிவரும் சேவையினை பாராட்டுவதோடு "அபிநய லாவண்யா" சிறப்புமலர் மனித மனங்களில் சிறந்த மாற்றத்தினையும், எதிர்கால கலைப் பண்பாட்டு முயற்சிகளுக்கு உரிய ஊக்கத்தினையும் வழங்கும் என்ற நம்பிக்கையுடன் ஆசிரியரது கலைச் சேவை மென்மேலும் எமது பிரதேசத்தில் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜே.எஸ் அருள்ராஜ்**
பிரதேசசெயலாளர், பட்டினமும் சூழலும்,
திருக்கோணமலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி



உலக வரலாற்றில் இனக்குழுமங்களின் பண்பாட்டினை அறிவதற்கு அல்லது புரிந்து கொள்வதற்கு ஆடல், அழகியல்சார் கலைகள் துணை புரிகின்றன. தமிழர் சாஸ்திரியக் கலைகளில் ஒன்றாக விளங்கும் இக்கலை தமிழ் பண்பாட்டியலில், கலையை தெய்வீகத்தன்மைக்கு உயர்த்தியமைக்கு தக்க சான்றாக விளங்குகின்றது. பரதநாட்டியம் நளினத்தோடும், பாவங்களோடும் உணர்வுகளை வெளிப்படுத்தும் அபூர்வக் கலையாகும்.

கால்களால் தாளத்தையும், கைகளால் அர்த்தங்களையும், கண்களால் பாவத்தையும், நளினத்துடனும், நயனத்துடனும் விளக்கும் போது அது நாட்டியக் கலை ஆகின்றது. நவரசங்களையும் வெளிப்படுத்தும் ஊடகமாக விளங்கும் பரதக்கலை, பல்வேறு மூலங்களை தன்னகத்தேக் கொண்டு மிளிர்கின்றது. பரதக்கலையின் முக்கண்களாக திகழ்வன பாவம், ராகம், தாளம் ஆகிய கூறுகளாகும். "நாட்டிய சாஸ்திரம்" என்னும் நூலின் இந்நடனத்தின் தோற்ற சிறப்பு தொடர்பாக விரிவாக கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் ஆடலரசன், நடராஜன் என சிறப்பித்துக் கூறப்படும் திருக்கோணேஸ்வர நாதர் அருளாட்சி புரியும் திருகோணமலையில் இக்கலை தனித்துவமான பல அம்சங்களுடன் வளர்ச்சியுற்று, சிறப்புற்றிருக்கின்றது. இக் கலையின் வளர்ச்சிக்கு பல தனிமனித ஆளுமைகளும், நடன மன்றங்களும், சபாக்களும் தமது காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளமையை எண்ணி நாம் பாராட்டுகின்றோம்.

திருகோணமலை மாவட்டத்தில் நடனத்துறையில், கடந்த 25 வருடங்களாக பரத நாட்டியத்தின் வழி கலைச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் "இராஜரெட்ணம் நடனாலயம்" தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இம் மன்றத்தின் ஆசான், நாட்டியக் கலைமணி திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் அர்ப்பணிப்புமிகு வழிநடத்தலில் இதுவரை பலநூற்றுக்கணக்கான மாணவிகள் இக்கலையை பயின்று, நடன ஆசிரியைகளாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தம் திறனை பறை சாற்றி வருகின்றார்கள்.

வெள்ளி விழா கொண்டாடும் "இராஜரெட்ணம் நடனாலயம்" மேலும் பல சிறந்த கலைப்படைப்புக்களை அளிக்கை செய்து, இக் கலையில் நிலைத்திருப்பை உறுதிப்படுத்த வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துவதுடன், அதன் இயக்குநருக்கும், நடனாலய மாணவிகளுக்கும், விழா ஞாபகார்த்தமாக மலரவிருக்கும் சிறப்பு மலருக்கும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்


திருமதி. **சிவப்பிரியா வில்வரத்னம்**
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.


## M.S. சுப்புலட்சுமியின் இசை பற்றிய கருத்து.

**குரு சிஷ்ய உறவு அதிக முக்கியத்துவம் உடையது. பாடக் கற்றுக் கொடுக்கின்ற குரு பாரம்பரிய முறைகளில் கூறப்பட்டு இருப்பவை மட்டுமே கற்பிக்க வேண்டும். பாடுகிற மாணவர் கேட்பவர் மனம் தெய்வீக உணர்வில் திளைக்குமாறு பாட வேண்டும்.**

**ரசிக மனங்களில் அடி ஆழத்தைச் சென்று தொடக்கூடிய இசையே நல்ல இசை. குரலின் தன்மையைக் காட்டிலும் உணர்வு முக்கியம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message of Felicitation



On this historical and joyous occasion of the 25 years of the foundation of " Rajaretnam Nadalayam" I am happy to send this message of appreciation to Mrs. Renukathevi Selvaputhiran. Every person chooses a field to contribute towards the society according to one's interest and capacity. Mrs. Renukathevi Selvaputhiran chose the Art of Dance especially the "Baratha Natyam" to contribute to her society. One of the ancient Arts is Baratha Natyam and is very popular in the Indian Tradition. She did her Diploma in dance at the University of Jaffna and followed a special practical course at Kopai Teachers' Training College. She served as a Dance Teacher for 25 years. While she was teaching in the school she has won many awards in various dance completion held in both District and National level. She has won several Gold Medals for single and group events at Tamil Day completion at National level. In the year 1996 she was awarded "Dance Teacher Par Excellence" by the North Eastern Governor for winning Gold Medals for three consecutive years.

It is for her excellence and dedication shown in the Art of Dance she has been honoured as "Nadiya Kalaimani', " Nadiya Vithaki", " Isai Nadana Navarethina" etc. In the year 1991 she founded the Dance School known as "Rajaretnam Nadanalayam". There have been hundreds of students who have passed through the above dance school and doing well both here in Sri lanka and abroad. Through the above dance school she helps both for the Religious and State Festivals. Great achievements have been produced by her. On this special occasion I am really happy to congratulate her for having been given whole self for the development of the Art of Dance. I wish her all the success in the future as well.

**Dr. B.M.P.V. BASNAYAKE**
MBBS, MS(ENT), MRCS(ENT) DOHNS(UK)
Consultant ENT Head & Neck Surgeon
Base Hospital - Gampola (Teaching)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message of Felicitation

It gives me an immense pleasure in extending felicitation on the occasion of the 25th Anniversary of the "Rajaretnam Nadanalayam". I take this opportunity to thank and appreciate Mrs. Renukathevi Selvaputhiran for having running the above dance school. The "Rajaretnam Nadanalayam" was founded in the year 1991 by Mrs. Renukathevi Selvaputhiran. This dance school has been one of the prominent dance schools in the Trincomalee district. The professional manner of training the children is the whole mark of this school. She has dedicated her life to this field or art since the beginning of her teaching carrier. The hard work and the tireless effort on the part of the founder Mrs. Renukathevi Selvaputhiran has won her high respect in this field.

She has been helping both for religious and state function in the district through the art of dance. She has produced several hearts breaking performances. High standard of discipline and human values are being instilled among the students of this school. There are hundreds of students who passed through the above school. I have no doubt that the Rajaretnam Nadanalayam will continue to maintain the high standards and be a blessing to those who enter into this school of dance. Though the interest of the present generation is towards the technological field the Rajaretnam Nadanalayam continues to attract more and more children in learning dance. This has been a great achievement on the part of the founder. The treasure of the ancient art being held alive.


I wish God's Blessing on Mrs. Renukathevi Selvaputhiran and all her collaborators. I have no doubt that she will continue to run this school and contribute toward the art of dance.

**W.L.K. Karunathilaka,**
District Engineer (Eastern),
District Engineer's Office,
Sri Lanka Railway,
Trincomalee.

"கற்பனா சக்தி என்பது ஒன்றை பெறுமதியுடன் உருவாக்குவதில் அல்ல.
மாறாக நீ உருவாக்கிய ஒன்றை மற்றவர்கள் பெறுமதியுடன்
அக்கறையாக பார்ப்பதில் தான் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இயற்கை அசைவுகளின் உன்னதங்களை ஒருமுகப்படுத்திப் பெறும் ஆற்றலின் உருவமாகவும், அரிய தெய்வாம்ச தத்துவங்களை சாதாரண மக்களுக்கு காட்சிப்படுத்தும் அதி உன்னத கலையாகவும் பரதக்கலையானது மிளிர்ந்து வருவதை உலகறியும்.

கலையை வளர்க்க கலைக்கூடம் அவசியம். இந்த வகையில் திருகோணமலை மண்ணில் 1991ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இராஜரெட்ணம் நடனாலயம் பிரதேச மாணவர்களின் கலைத்தாகத்தினை தீர்க்கும் சிறந்ததோர் ஆசிரியரின் அயராத முயற்சியினால் தனது 25வது அகவையில் வெள்ளி விழாவினை கொண்டாடுவது மிகவும் பாராட்டுதற்குரியது.

பட்டங்கள், விருதுகள் பல தான் பெற்றதுடன் மட்டும் நின்று விடாது, தனது மாணவச் செல்வங்களையும் பற்பல விருதுகளை பெற வைக்கும் ஓர் சிறந்த குரு திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள். எமது பிரதேசத்தில் பல்வேறு சாதனைகளை மாணவர்கள் பெற வழிகாட்டியாக அமைந்ததுடன் ஆன்மீக சேவையிலும் கலையின் மகத்துவத்தை உணர்த்தி வருகின்றார். கல்வித்துறையில் அவரது சேவைக்காலத்தில் கலைத்துறை சார்பாக ஆற்றிய சேவைகள், அவர் பெற்ற விருதுகளும் அவரது கலாலய சிறப்புமலர் வெளியீடுகளும் சான்று பகர்கின்றன. பல்வேறு தலைப்புக்களிலான நாட்டிய நாடகங்களின் படைப்புக்கள் இப்பிரதேசத்தில் பல்வேறு திறன் வாய்ந்த சிஷ்யர்களை உருவாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த வகையில் இராஜரெட்ணம் நடனாலய ஸ்தாபகர் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கலைக்கூடமானது மென்மேலும் சிறப்புற வளர்ந்து மேலும் அகவைகள் பல காண எல்லாம் வல்ல ஆடற்கரசரான நடராஜப்பெருமானின் ஆசி வேண்டி தாழ் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றேன்.

**ந.விஜேந்திரன்.**
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
திருகோணமலை.

"பாரதம் தந்த பரிசு
பஞ்ச பூதங்களின் தொகுப்பு
சிதம்பர சிலைகளின் உயிர்ப்பு
சங்க இலக்கியங்களின் சிறப்பு
மானிட வாழ்வின் அழகு
ஐம்புலன்களும் கூடிடும் கூத்து
நவயோக முறைகளின் பதிப்பு
நடராஜ வேந்தனின் மதிப்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திடகாத்திரமான பண்புகள் நிறைந்த இந்நாட்டின் பாரம்பரியத்தையும், கலையம்சங்களையும் ஒவ்வொரு மூலை முடக்குகளிலும் நிறைந்த சம்பிரதாயமிக்கதாக வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம்மிடம் தரப்பட்டுள்ளது. அதனை மானசீகமான முறையில் பாதுகாப்பதும் எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதும் எமது தார்மீக பொறுப்பாகும். அந்த வகையில் இராஜரெட்ணம் நடனாலயத்தின் இருபத்தைந்தாவது வெள்ளி விழா தொடர்பாக நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் கலை வளர்ச்சி தொடர்பில் கலை மன்றங்களின் பாரிய பங்களிப்பு போற்றுதற்குரியது. பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளோடு பண்பாடுகளை பண்படுத்தும் சேவையிலும் கலை மன்றங்கள் விழுமியங்களை நிலைநாட்டுகின்றது. அத்தோடு நாட்டின் வளர்ச்சிப் போக்கில் இவை பெறுமதியான விகிதாசார அடிப்படையில் நன்னெறிப்படுத்தும் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத்துக்களும் இருக்க முடியாது. கிழக்கு மண்ணை பிரதிநிதித்துவப் படுத்தும் பாரம்பரியம் தொடர்பாக நான் அறிவேன். அவை தொடர்பான தகவல்கள் அனைத்தும் சகல சமூகத்தினரையும் சென்றடைய வேண்டும் என்பதே பலரினதும் தேவைகளாக இருக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது. அதற்கு இராஜரெட்ணம் நடனாலயமானது சிறந்த ஊடகமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எனும் வகையில் இராஜரெட்ணம் நடனாலயத்தின் இருபத்தைந்தாவது வெள்ளி விழாவின்போது வெளியிடப்படுகின்ற "அபிநய லாவண்யா" சிறப்பு மலர் தொடர்பாக நான் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இம்மலருக்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் பெருமிதமடைவதோடு இராஜரெட்ணம் நடனாலயத்தின் இருபத்தைந்தாவது வெள்ளி விழா வெற்றிகரமாக நடந்தேறவும் இனிவரும் காலங்களில் மென்மேலும் சிறப்புற இவ்வாறான நிகழ்வுகள் நடாத்தப்படுவதற்கு எல்லா விதமான அனுகூலங்களும் கிடைக்கப்பெற வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

**அனூஷா கோகுல பர்னாந்து**
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

திருக்கோணமலையில் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் முத்தமிழில் ஒன்றான நாட்டியக்கலை ஊடாக கடந்த 31 வருடங்களாக கலை தொண்டாற்றி வருகின்றார்.

இவரால் 1991ம் வருடம் "இராஜரெட்ணம் நடனாலயம்" என்னும் கலைக்கல்லூரி நிறுவப்பட்டது. இவர் யாழ் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியா போன்ற இடங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டு நாட்டியக்கலையில் நாட்டியக்கலைமணி போன்ற பல பட்டங்களையும் பெற்று திகழ்ந்தார். இவரது சேவையின் கீழ் இயங்கும் நடனாலயம் பல தங்க பதக்கங்களையும், விருதுகளையும், கோப்பைகளையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டமை இவரது நடனத்திறமையையும் கற்பித்தலையும் வெளிப்படுத்துகின்றது.

இவரிடம் நடனம் கற்ற மாணவ, மாணவிகள் வட இலங்கை சங்கீத சபையால் நிகழ்த்தப்பட்டு வரும் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியர்களாக சேவையாற்றி வருகின்றார்கள். அது மட்டுமல்ல 2012ம் வருடம் சர்வதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட "ஜெயாஞ்சலி" நடனப் பரீட்சையில் சித்தியடைந்து இலண்டன் செல்வதற்கு தெரிவு செய்யப்பட்டமையானது இவரது கற்பித்தலின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. எனவே இராஜரெட்ணம் நடனாலயத்தின் 25வது ஆண்டு விழாவுக்கான ஆசிச் செய்தியினை வழங்குவதில் நிறைவடைகின்றேன்.

இவரது பணி எமது பண்பாட்டுக்கமைவாக தொடர்ந்து இயங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் அருளாசி கிட்ட வேண்டுகின்றேன்.

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.
**சோ.ரவிச்சந்திரகுருக்கள்**
பிரதமகுரு, ஆதீனகர்த்தா
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளி விழா நிகழ்வு வெற்றி பெறட்டும்!

உலகின் உன்னத கலைகளில்,
தனித்துவமான நம் பரதத்திற்கு தலைமையிடம் உண்டு
தமிழர்தம் ஆயகலைகள் அறுபத்து நான்கினுல்,
அனைவரையும் ஈர்க்கும் ஆற்றல் கொண்டதாய் விளங்குவது பரதம்
இப்பரதக்கலையை ஈழத்தவரும் தொன்றுதொட்டுப் போற்றி வருகின்றனர்.
வடக்கு, கிழக்கு என தமிழர்தம் தாயகப்பகுதிகளில்,
இக்கலைக்காய்த் தம்மை அர்ப்பணித்துக் கொண்டோர் பலர்.
அந்நல்லார் வரிசையில் இன்று கிழக்கு மாகாணத் திருகோணமலையில்,
இராஜரெட்ணம் நடனாலயாம் எனும் நிறுவனத்தை அமைத்து,
கால் நூற்றாண்டாக இயங்கி வரும்,
ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களும் இடம்பிடிக்கிறார்
ரேணுகாதேவி அவர்கள் என் கெளுதகை நண்பர் மகேந்திரராஜா அவர்களின் சகோதரியாவார்
எங்கள் கழகத்தை உறவாய்ப் பேணுவோரில் அவரும் ஒருவர்.
அவர்தம் அன்புத் தொடர்பே ரேணுகாதேவியை எனக்கு அறிமுகப்படுத்தியது.

தனது நிறுவனத்தின் வெள்ளிவிழாவையொட்டி "அபிநய லாவாண்யா" எனும்,
நாட்டிய நிகழ்ச்சியை ரேணுகாதேவி நடாத்துவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.
அறிவும், ஆற்றலும், அனுபவமும் மிக்க அவர்தம் முயற்சி உயர்ந்து சிறக்க,
என்னை வாழ்விக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் பாடிப்பரவும் பரம்பொருளை,
வேண்டிப் பணிகின்றேன்.

" இன்பபே எந்நாளும் துன்பமில்லை"

கம்ப வாரிதி **இ.ஜெயராஜ்**
அகில இலங்கை கம்பன் கழகம்
கொழும்பு

**சந்தர்ப்பம் கதவை தட்டவில்லையென்றால்**
**அந்தக் கதவை நீயே உருவாக்கு.**
**Opportunity doesn't knock Build a door**
**- Micton Brile**

**"இடைவளை நடைகளை கண்ணிடை விடைகளை**
**இயையோடு அசைவோடு தரும் கலை பரதம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message of Blessing



It gives us great pleasure to send this message of felicitation from London to mark the Silver Jubilee of the Rajaratnam Nadana Alayam in Trincomalee.

We had the great priviledge to be present in Trincomalee in September 2014 to attend the amazing Dance-Drama staged by this institution to depict the epic story of the Thirukoneswaram Temple. It was a stunning performance which demonstrated the power of dance and music to convey a complex historical narrative in a way that directly touches our minds and hearts. The performance was also a wonderful show-casing of the way in which Mrs Renukadevi Selvaputhiran, the driving force behind the Nadana Alayam, has brought together the enthusiasm, dedication and talents of the children, parents and well-wishers in Trincomalee to make this institution a major contributor to the performing arts in Sri Lanka. In these times, when there are many challenges threatening our language and culture, the dedication and hard work of individuals and institutions like these are what stand between cultural survival and extinction.

Though the Nadana Alayam has been the main focus of Mrs Selvaputhiran's life and career, she has, over the past thirty years, made major contributions on a broad front particularly in nationwide curriculum development and examination setting for the performing arts, contributions to journalism in print and broadcast media, and in leading her students to outstanding success in several nation-wide competitions.

We pray for your continued success in the years ahead.

Best wishes
**Dr Xavier Emmanuel**
Tudor Road, Beckenham,
London, UK.



கைவழி நயனம் செல்ல
கண்விழி மனம் செல்ல
மனம் வழி உணர்ச்சி செல்ல
அதனின்று சுவையிறங்கும்
- பரத முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராஜ நடை போடும் இராஜரெட்ணம் நடனாலயம்

கடந்த 30ஆண்டுகளுக்கு மேலாக சைவத் தமிழர்களின் உயிர் மூச்சுக் கலையாக திகழ்வது பரதம். எம் முழுமுதற் கடவுள் தில்லைக்கூத்தன் திருவிளையாட்டில் முதன்மை பெறுவதும் இந்த நடனக்கலையே. இப்படியான இந்தக்கலையினை கடந்த மூன்று தசாப்தங்களாக, நாட்டின் பல இன்னல்கள் மத்தியிலும் தளராமல் தயங்காமல் பேணிவரும் ரேணுகாவுக்கு எமது சிரம் தாழ்த்திய வணக்கங்கள், நன்றிகள் பல கோடி.

கலைஞானம் என்பது பிறப்பு இயல்பா அல்லது பயிற்சி மூலம் கிடைப்பதா என்றால் இரண்டுமே உண்மைதான். பிறவியிலேயே சில குணங்கள் அமைந்தால் மட்டுமேதான் பயிற்சி பெற்று அவை முறையான வழியில் ஒளி பெற முடியும். இந்த வகையில் நாட்டிய கலைமணி, நாட்டிய வித்தகி, இசை நடன நவரத்னா, அபிநய ஆசான் ரேணுகாதேவி அவர்கள் அந்த தில்லைக்கூத்தனின் அருள் பெற்றவர் ஆகின்றார்.

சிவன் பார்வதியின் இந்த திருக்கலையை தன் வாழ்வின் முதன்மையாக பெருமைப்படுத்தி வழிகோலும் இராஜரெட்ணம் ரேணுகாதேவிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இப்படியான இந்த அரிய கலையை தன் வாழ்வாக முழு மனநிறைவுடன் அருந்தொண்டாற்றி வரும் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களுக்கு சைவத் தமிழர்களாகிய நாம் அனைவரும் நன்றியுடையவர்களாக கடமைப் பட்டுள்ளோம்.

நாட்டிய கலைமாமணி திருமதி.ரேணுகாதேவி அவர்களின் இந்த கலைப்பயணம் மென்மேலும் இனிதே இடையறாது தொடர எல்லாம்வல்ல அந்த ஆடலரங்கன் தில்லைக்கூத்தன் நடராஜப் பெருமானை வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.

நன்றி
வணக்கம்

அன்புடன்
**பொன்னையா ஞானநாதன்**
District Engineer Railways (Trincomalee.)
(1979-1985)

**சிறந்த எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு சிறந்த வழி அந்த சிறந்த எதிர்காலத்தை நீயே உருவாக்கிக் கொள்வது தான்.**
**The Best Way to predid the future is to creat it**
**- Peter drucker**

**"அறிவை விட கற்பனை தான் புதுமைகளைக் கண்டு பிடிக்க பெரிய அளவில் உதவுகிறது"**
**-ஆல்பார்ட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Felicitation Message

It is matter of great joy for me to send the message of felicitation as RAJARETNAM NADANALAYAM (Rajaretnam Dance School) marks the silver jubilee. It was founded by Mrs.Renuka Selvaputhiran in 1991.

My first acquaintance with Mrs.Renuka in 1994 as i became the Parish Priest of Our Lady of Guadalupe where Mr.Clive Selvaputhiran has been an on time member of the church.

Mrs.Renuka Selvaputhiran has demonstrated her talents in the fine arts professionally all over the and particularly in Trincomalee.

During her performance she was honoured with titles line Natya Kalaimani, Natya Viththine, Isai Nadana Varthana Abinaya Aaasan.

I would be failing my duty, if i do not place on record the deep appreciation of the catholic church for the unstained cooperation and ever willing collaboration of Mrs.Renuka particularly at St.Mary's college (National School) in Trincomalee. During the "Golden Era" of Former principal Rev.Sr. Therese Rani AC who promoted her so much to develop her ability.

She has been popular among her students for the great love perseverance and determination. She has been always taking up leadership of the more challenging and difficult as a teacher. She was able to win in so many competitions at National Level.

Though a Hindu she has the respect for all other religions. She has been a bridge between various religious groups through the fine arts. Her contribution to this country will be remembered.

While I congratulate Mrs.Renuka Selvaputhiran. I wish her God's choicest blessings for good health long life and continued strength to serve many more years, in the field of dance and bring honour nationality and internationally.

Rev.Deshamaniya
**Dr. George Dissanayake J.P,**
Justice of peace (Whole Island),
Parish Priest,
St.Anthony's Parish,
China Bay.

கழலொடு திருவிரலால் கரணம் செய்து
கனவின் கண் திருவுருவம்தான் காட்டுமே
எழிலாடும் தோள் வீசித் தான் ஆடுமே
-திருநாவுக்கராசர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Words of Appreciation

It gives me a great pleasure in writing these words of appreciation on the occasion of the Silver Jubilee of the "Rajaretnam Nadanalayam". Mrs. Renukathevi Selvaputhiran the founder of this particular dance School, through her tireless effort has brought to the highest standard. It is a great achievement in the art of dance. She completed the Diploma in Dance at the University of Jaffna. She had been one of the leading dance teachers at St. Mary's College Trincomalee. I am very happy to say that St. Mary's College Trincomalee had won several Gold Medals both in the District and National level dance competition. She has been a teacher "Par Exelance" throughout her carrier. She has produced varieties of excellent dances and has won the hearts of people. In 1987 when she was working in the up country in recognizing her great talent and skill in the field of dance late Minister Thondaman honoured her.

There are hundreds of students who has been benefitted from the "Rajaretnam Nadanalayam" and doing well in the field of dance. It is a great blessing to the District of Trincomalee. While appreciating Mrs. Renukathevi Selvaputhiran for her dedication at the field of dance and culture, I wish her all the success. Let the Almighty God Bless her and those who have been working with her toward this grate achievement.

Rev. **S. Sugunenthiran Croos**
Parish Priest
Infant Jesus Church
Orr's hill, Trincomalee.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"ராஜரெட்ணம் நடனாலயம்" இவ்வாண்டு தனது 25வது ஆண்டு பிறப்பு நாளை வெள்ளி விழாவாகக் கொண்டாடும் வேளையில் எனது இறையாசீர் நிறைந்த வாழத்துக்களை அன்போடு தெரிவித்து நிற்கின்றேன். இவ்வேளையில் இவ் நடனாலாயக் குழந்தையை தனது குழந்தையாக தத்தெடுத்து, உணர்வு கொடுத்து, அன்பு காட்டி வளர்த்தெடுத்து தான் பிறந்த மண்ணிலும், தன் நாட்டிலும், ஏன் உலகின் சில நாடுகளிலும் அவளின் கலையை வளர்த்தெடுத்து இயக்கிக் கொண்டிருக்கும் என் அன்புக்குரிய திருமதி. ரேனுகாதேவி செல்வபுத்திரன் அவர்களை வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன். தான் ஆழ் கடல் சென்று தேடிப் பெற்ற "முத்து" நடனக்கலையை மாணவிகள் மூலம் அதனை மேன்மேலும் மெருகூட்டி வளர்த்துக் கொண்டிருப்பதைக் காணும் போது, நடனக் கலையை காணும் அனைவரும் பேருவகை கொள்கின்றனர். அதன் அளவுகோலாக இவ் நடனாலயம் பெற்றுக்கொண்ட தேசியமட்டத்திலான முதன்மைப் பெறுபேறுகள் பாராட்டுக்கள். இதற்கு காரணம், குறுகிய வட்டத்தில் நில்லாது எல்லைகள் தாண்டி இனம், மதம் பாராது எல்லாம் என் பிள்ளைகள் என்ற பெருந்தன்மையோடு பிள்ளை நெறிபிறழாது வளர்த்து வந்தமை ஒரு சான்றாகும்.

இதனோடு, ஆசிரியை ரேனுகாதேவி அவர்களை என்றும் அருகேயிருந்து அனைத்து உதவிகளையும் தகுந்தவேளையில் செய்து கரம் கொடுத்துக் கொண்டிருக்கும் கணவன் செல்வபுத்திரன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

இறுதியாக இவ் "ராஜரெட்ணம் நடனாலயம்" இன்னும் வளர வேண்டும், அதன் சிற்பி ரேனுகாதேவி செல்வபுத்திரன் நிறை மகிழ்ச்சி காண வேண்டும் என இறையாசீயை கூறிநிற்கின்றேன்.

வாழ்க வாழ்க,

அருட்பணி. **அ. இராயப்பு**
தியான இல்லம் மடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

தில்லைக்கூத்தன், சிதம்பரநடராஜன் எனப் பிரசித்தி பெற்ற சிவபூமியில் சரித்திரப் புகழ் பெற்ற திருக்கோணேசர், மாதுமையம்பாள் வீற்றிருந்து திருவருள் புரியும் திருகோணமலையில் பிறப்பது அரிது என்கிறார்கள்.

அவ்வாறே ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் இறுதியான நடனக்கலையை நம் நாட்டில் "குழந்தையும், தெய்வமும் ஒன்று" என்பதற்கேதுவாக கள்ளங்கபடமற்ற இளந்தளிர்களுக்கு வித்திடும் வித்தகி திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் ஆற்றும் தொண்டும் அளப்பரியது.

"ஆடற்கலை" மனம் நலிவுற்றோருக்கு ஒரு அருமருந்தாகும். இக்கலையைப் பயில்வதற்கு வாய்ப்புக் கிடைப்பதென்பது வெள்ளிட மலை தான். இதே போன்று இதனை வளர்ப்பதற்கும், வளப்படுத்துவதற்கும் ஒருசிலருக்கே திருவருள் கூடிவரும். அத்திருவருள் கூடிய திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள், "இராஜரெட்ணம் நடனாலயம்" ஒன்றை அமைத்து கற்ற கலையை வளர்க்கத் தொண்டாற்றி வருகிறார். "ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" எனும் குறளுக்கேற்ப பெற்றோர்களுக்கும் அவர் தம் குழந்தைகளை உருவாக்கிக் காட்டியுள்ளார்.

நடனக்கலையில் பாவம், ராகம், தாளம் இவை மூன்றும் முக்கியம். இம் மூன்றும் அமையப் பெற்ற ஆடற் கலையினைக் கண்டு மயங்காதவர் யாருமில்லை. தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்களைக் காத்து நிற்பதிலும் எமது "பரதநாட்டியம்" அரும்பங்காற்றுகின்றது. இதனை ஆர்வமுடன் பயிற்றுவிக்க ஆசை கொண்ட இவ் ஆசிரியர் பல நாட்டிய நாடக கலாச்சார நடனங்களையும் பயிற்றுவித்து மேடையேற்றி எமது கலாச்சாரத்தை வளர்க்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் பெரிதும் பாராட்டப்பட வேண்டியமை எமது கடமையாகும்.

பல கல்வி வளர்ச்சிக்கான ஊடகங்கள் தோன்றி மறையும் இக் கால கட்டத்தில் கடந்த 25 வருடங்களாக வேரூன்றி பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கும் "இராஜரெட்ணம் நடனாலயம்" மேலும் மேலும் வளமுடன் வளர்ச்சி பெற எமது வாழ்த்துக்கள்.

"குருவுக்கேற்ப சிஷ்யர்கள்" என அவர் தம் நடனாலயத்தில் பயின்று வரும் மாணவர்களும் வெகு சிரத்தையோடும் விருப்போடும் ஊக்கத்தோடும் செயற்படாவிட்டால் வெற்றி காண்பது அரிது. அவர்களை ஊக்குவிக்கும் பெற்றோர்களும் நவீன யுகத்தில் தமக்கு இருக்கும் பல வேலைப் பழுக்களின் மத்தியிலும் எமது பாரம்பரிய கலையை வளர்க்க ஆர்வமுள்ளவர்களாக இருந்திராவிட்டால் நமது கலாச்சாரங்கள் பாதுகாக்கப்படுவது கடினமானதே. அவர்களுக்கும் எமது நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாக வேண்டும்.

எனவே இவ் நடனாலய ஆசிரியர், மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சியுடன் மென்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

**ஆ.ஞா.தெய்வேந்திரன்**
உதவிச் செயலாளர்
கல்வி, தகவல், தொழில்நுட்பக் கல்வி, முன்பள்ளிக் கல்வி,
விளையாட்டு,பண்பாட்டலுவல்கள்,இளைஞர் விவகாரம்,
புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு, (கி.மா)
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

ஒரு நடனக் கல்லூரியின் இருபத்தைந்து ஆண்டுகள் என்பது சாதாரணமானதல்ல. இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக நூற்றுக்கணக்கான பரதநாட்டியத் தாரகைகளை உருவாக்கிய ஒரு நடனாலயத்தின் வரலாற்றில் எத்தனை சாதனைகள் தடம் பதித்துள்ளது என்பதனை திருகோணமலை இராஜரெட்ணம் நடனாலயத்தின் கடந்த கால வரலாறுகள் புலப்படுத்துகின்றது.

இவ் நடனாலயத்தின் பங்களிப்பு சமயம் மற்றும் சமுதாயம் இரண்டு வகையிலும் சிறப்பாக குறிப்பிடத்தக்கது எனக் கருதுகின்றேன்.

முதலாவது சமய அடித்தளத்தில் நின்று பரதக் கலையை வழங்கியது. பரதக் கலையுடன் சமய விழுமியங்களும், கலாச்சாரப் பண்பாடுகளும் இணையும் போது தான் பண்பட்ட செம்மையான கலை துலங்கும், பரத நாட்டியத்தின் நிறைவான பயனும் கிட்டும். இராஜரெட்ணம் நடனாலயம் வழங்கிய திருக்கோணேஸ்வரத்தின் புகழ்பாடும் தென்கைலைவாசா நாட்டிய நாடகம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இரண்டாவது நாட்டிய மாணவிகளின் சமூக எழுச்சிக்கு வழங்கிய பங்களிப்பு தொன்மையான இனத்தின் கலையை, கலாச்சாரத்தை எமது பண்பாட்டின் மீது இருந்த தடைகள் படிப்படியாக உடைத்து முழுமையான வளர்ச்சியடையவும், நமது இனத்தின் பரதக்கலையின் வளர்ச்சிக்கும் திருகோணமலை இராஜரெட்ணம் நடனாலயம் தனக்குரிய கடமையை செவ்வனே செய்துள்ளது என்பது நாம் பெருமைப்படத்தக்கதாகும்.

1991ம் ஆண்டு திருகோணமலை மண்ணில் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் தந்தையின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இராஜரெட்ணம் நடனாலயம் கடந்த 25 வருடங்களாக பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து தேசிய விருதுகளையும், பட்டங்களையும் பெற்று வளர்ச்சிப்படிகளில் முன்னேறி இந்த மண்ணில் ஒரு சிறந்த நடனப்பள்ளியாக உயர்ந்து நிற்பதைக் காணும் போது இவ்வளர்ச்சி நமது இனத்தவர்களுக்கும் கலையுணர்வு கொண்டவர்களுக்கும் நிறைவைத் தருகின்றது.

அத்தோடு இந்த வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் உழைத்த நடன ஆசிரியையின் கணவர் திரு.செல்வபுத்திரன் மற்றும் அவர்களின் சகோதர சகோதரிகளின் ஊக்கமும், உறவினர்களின் நேசமும், மாணவர்களின் இடைவிடாத பயிற்சியும், பெற்றோர்களின் ஆதரவும் இப்பணிக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

"சிவபூமி" எனப்பெயர்பெற்ற இம்மண்ணிலிருந்து பண்பாட்டு நெறியின் வெளிப்பாடாக வாழ்ந்து வளர்ந்து தன்னையே பரதக்கலைப் பணிக்கு அர்ப்பணித்து தமிழ் மண் போற்றும் தாரகையாக மக்கள் மனங்களில் பதிந்துவிட்ட திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களின் கலைப்பணியானது காலத்தை வென்று இருபத்தைந்து ஆண்டுகள் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இவை அனைத்திற்கும் இறைவனின் அருளும் பெற்றோர்களின் ஆசியும் நல்ல உள்ளங்களின் வாழ்த்துக்களுமே காரணமாகும்.

இருபத்தைந்தாவது அகவை தலைநிமிர்ந்து அதனை கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ் நடனாலயம் கிழக்கு மாகாணம் திருகோணமலையிலிருந்து திக்கட்டும் புகழ் எட்ட கலாச்சாரமும், பண்பாடும் பரதமும் தழைத்தோங்க வளமுடன் இன்னும் பல அகவைகளைக் கண்டு மேலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல அந்த ஏதோ ஒன்றை வணங்கி எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**க.செல்வராஜா**
முன்னால் முதல்வர்
நகராட்சி மன்றம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருகோணமலையில் அமைந்துள்ள "இராஜரெட்ணம் நடனாலயா" வின் இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழாவினையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றினை அனுப்புமாறு திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்விதழை சமர்ப்பிக்கிறேன்.

இருபத்தைந்து காலம் தொடர்ந்து பரதக் கலைக்கு பணி ஆற்றிவரும் ரேணுகாதேவி நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு முதலிய நற்குணங்களை தன்னகத்தே கொண்டவர்.

இவரது கலை ஆர்வம் ஓங்கவும் மேலும் பல சிறப்புக்களையும் சாதனைகளையும் இவர் இத்துறையில் ஈட்ட வேண்டுமெனவும் எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

நாட்டிய வாரிதி
**லீலாம்பிகை செல்வராஜா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

ஒவ்வொரு மனிதனையும் இறைவன் பூமியில் பிறக்க வைக்கும் போதே, அவனுடைய இறப்பு நாளையும் பதிய வைத்து விடுகின்றான். நாம் எத்தனை நாட்கள் வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல எவ்வாறு வாழ்கின்றோம் என்பதே முக்கியமாகும். அந்த வகையில், திருக்கோணமலையில் பரதக்கலையை வளர்க்கும் ஒரு நட்சத்திரமாக விளங்குகின்றார் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள்.

இவர் பரதக்கலை மேல் கொண்ட பற்றும் - பாசமும் காரணமாக தன்னுடைய தகப்பனாரான "இராஜரெட்ணம் நடனாலயம்" என்ற பெயரில் நடனப் பள்ளியை உருவாக்கி பரதநாட்டியக் கலையை திறம்பட கற்பித்து வருகின்றார். நடனாலயத்தை ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்கள் பாய்ந்தோடி விட்டது.

2009ம் ஆண்டு இவர் "அபிநய சாதனா" என்ற பெயரில் இராஜரெட்ணம் நடனாலயத்தின் 18வது ஆண்டை சிறப்பாகக் கொண்டாடியுள்ளார். அத்துடன் 2014ம் ஆண்டு "தென்கயிலை வாசா" என்ற தலைப்பில் ஓர் நாட்டிய நாடகத்தையும் தயாரித்து, நெறிப்படுத்தி வழங்கியுள்ளார். இவைகள் அனைத்தும் இவருடைய திறமைகளை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன.

திருக்கோணமலை மண்ணில் "இராஜரெட்ணம் நடனாலயம்" என்ற பரத நாட்டியப் பள்ளியை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடாத்தி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் இந்த வேளையில் இருபத்தைந்தாவது ஆண்டில் மென் மேலும் சிறப்புக்கள் பெற்று சீருடனும், பேருடனும் வாழ அருள்புரிய வேண்டும் என்று எல்லாம் வல்ல கோணேஸ்வரப் பெருமானின் பாதங்களை வணங்கி வாழ்த்துக் கூறுகின்றேன்.

"நடனத்திலகம்", "கலாபூஷணம்"
"வித்தகர்", "நாட்டிய வித்தகி"
திருமதி. **சாரதாதேவி சிறிஸ்கந்தராஜா**
இயக்குனர், திருக்கோணேஸ்வரர் நாட்டியக் கலா மன்றம்
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரத கலையின் இன்றைய போக்கு

ஒன்றின் அசைவாய் வெளிப்பட்ட உலகின் இயக்கம் ஓர் ஆடலாய் பரிணமித்து மனிதப் பரிணாமத்திற்கு ஏற்ப கலையாய் அது விரிந்து "பரதம்" என்றொரு ஆடலாய் மிளிர்ந்தது.

மனிதப் பரிணாமம் "மனிதன் என்றொரு நிலை கண்டு, உயர்திணை பால் வடிவம் கண்டு, தன்னைக் கண்டு தனக்கென மொழி கண்டு ஆறாம் அறிவின் துணை கொண்டு தன்னைப் புதுப்பித்த போது உருவான மூத்த மொழியாய் முதல் மொழியாய் மலர்ந்தது தமிழ். மொழிந்தவன் தமிழன்.

பண்பாடு என்றொரு சொல்லாட்சிக்குள் அவன் புகுந்த போது அவனுக்குள்ளான லயம் ஆடலாயும் பாடலாயும் மிளிர்ந்தது. காலமறியா காலத்தில் பேசப்பட்ட மொழியாக தமிழ் பேசிய தமிழனும், காலம் கண்ட வரையறைக்குள் வந்த போது, "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற மிகப் பெரிய மனக்கருத்தை உலகுக்காய் விரித்தான். உலகாய் விரிந்தான்.

மேற்படி மகுட வாக்கியம் வெறும் சொற்றொடர் அல்ல. தமிழனின் வாழ்வியல் பண்பாட்டின் உயர் தொனிப்பொருள். அத்தகைய உயர் எண்ணக் கருவாளனின் சிந்தனையில் அனுபவக் கட்டமைப்பாக வந்த கலை ஆடல். அது பரதம்.

தனி மனிதன் ஒருவரின் "உலகமயமாதல்" சிந்தனையின் மையப்பொருளே "யாதும் ஊர்" என்பதாம். தன்னையன்றி இன்னொருவனை தன் எண்ணத்தில் கொண்டு வந்த அக்கணமே அங்கு குடும்பம் என்ற பரவலாக்கம் வந்து விடுகின்றது. அப் பார்வையின் நேர் கோட்டில் பயணிக்கையில் அது சமுதாயம் ஆகிறது.

சமுதாயம் என்பது என்ன? இக் கேள்விக்கு நீங்கள் விடை காணும் போது ஊர், தேசம், நாடு... என்றவாறாய்.... இது உலகமயமாதல். அக்கருவின் மிக விரிந்த தன்மையில் இன்று நாம் நின்று கொண்டிருக்கின்றோம். அன்று உள்ளுணர்ந்த லயம், ஆடலாய் கலையாய் மலர்ந்து இறை அர்ப்பணமாய் மிளிர்ந்து அதுவோடு கலந்து உலகப் பார்வையுள் புகுந்து இறை-கலை-சமூகம் என்ற சொற்சாரல் கொண்டு இன்றளவும் நம்மிடையே நிலைத்து நீடித்து பயணித்துக் கொண்டு இருக்கின்றது.

சுற்றிலும் இயந்திரமும் நவநாகரீக சிதறலும் இலத்திரனியற் பங்களிப்பும் விஞ்ஞானப் பெருமிதங்களும் கணப்பொழுது தொலைத்தொடர்புகளும் உலகை சிறிதாக்கி மனிதனது உள்ளங்கைக்குள் வைத்துள்ளன.

இலங்கை கீழ்கரையில் எங்கோ ஓர் மரநிழலில் நான் மூச்சு விடும் சத்தம் அமெரிக்க தலைநகரின் அடுக்குமாடித் தொடரின் ஓர் அறையில் கேட்கிறது. இது மிகப் பெரும் மனித சாதனை இதயத்தின் சத்தம் கேட்கிறது. அந்த இதயத்திற்கு உரியவனின் உணர்வுகள் யாருக்குக் கேட்கின்றது? அந்த உணர்வுகளின் பக்குவப்பட்ட வெளிப்பாடே ஆடற்கலை.

உலகம் எந்தப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது? உணர்வுகளின் மையப் பொருளை காண்கிறதா? ஆடல் இறையோடு சம்மந்தப்பட்ட அற்புதக்கலை. இன்று அதன் மையத்தை விட்டு நழுவுகிறதா? கலை-ஆன்மிகம்-சமூகம் என்ற கருப்பொருள் தேவையானதா? இன்றைய உலகம் கேட்கும் கேள்வி இது. இன்றைய மனிதன் ஒருவனின் எண்ணத்தில் இந்த கருப்பொருள் "அவசியமற்றது" என்ற எண்ணத்தை தோற்றுவித்தது எது.

இது உலக மயமான தன்மையின் வெளிப்பாடா? உலக மயமாதல் என்பது ஒரு மனிதனின், ஒரு சமுதாயத்தின், ஒரு இனத்தின் பண்பாட்டினை அந்த இனத்தின் விழுமியங்களை அதன் சடங்கு சம்பிரதாயத்தை அழித்து விடுமாயின் அல்லது மாற்றிவிடுமாயின் அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுதல் அச் சமுதாயத்தின் அந்த இனத்தின் இருப்பை ஒழிப்பதாகாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பே இல்லாது போய்விடின் அங்கே கலை பற்றியும் பண்பாடு பற்றியும் யாரிடம் பேசுவது? உலகுக்கு ஓர் மையப்பொருள் உண்டு. உயிர்களுக்கு ஓர் மையப்பொருள் உண்டு. கலைகளுக்கும் ஓர் மையப்பொருள் உண்டு. மனிதனுக்கும் மையப்பொருள் உண்டு. ஒரு மனிதனை ஏன் இறையோடும் சமூக விழுமியங்களோடும் சம்மந்தப்படுத்துகின்றோம்? மனிதன் என்ற கருப்பொருளை எது சிதைக்கிறதோ, அது மனித்தை அழித்து விடும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டியதொன்று. ஆன்மீகத்தை கலையை எதனோடு இணைக்க விரும்புகிறீர்கள். சமூகம்-கலை-சமூகம்அப்படியா? அன்றி கலை-சமூகம்-அது போதுமா? சமூகத்துக்கு உயிர் இருக்கின்றது. கலைக்கும் உயிர் இருக்கின்றது.

சமூகத்தின் உயிரை, அச்சமுதாயத்தின் உயிரை தனிமனிதனின் உயிரைத் தழுவியதாகவே கலை பயணிக்கிறது, பயணிக்க வேண்டும். அக்கலை வாழ வேண்டுமாயின், அதன் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும். வெள்ளத்தில் போகும் சருகாய் சமுதாயம் அடிபட்டுச் செல்கையில் கலையும் அக் கலை வெள்ளத்தில் சிதறுண்டு போகுமெனில் இரண்டும் தொலைந்த உலகாகி விடும்: பரதமும் அப்படித்தான்; தமிழனும் அப்படித்தான்; கலையும் அப்படித்தான்; மனிதனும் அப்படித்தான்; மனிதமும் அப்படித் தான். செதுக்கப்பட்ட சிந்தனையை செதுக்கவென்று கோடரி கொண்டு வராதீர்கள். சிற்றுளி இருந்தால் எடுங்கள். செதுக்க தெரியுமா உங்கள் மனத்தை எடுத்து செதுக்கி பாருங்கள். நீங்கள் இருக்கிறீர்களா? சரி வாருங்கள், பரதக்கலை செதுக்கலாம்.

அவ்வாறான செதுக்கும் பணியை செவ்வனே செய்து வருகின்றார் திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள். அவரது கலைப்பணியின் 25வது வருடங்களும் திருக்கோணமலையின் சிறப்பான காலங்களே. பரதத்தின் இலக்கணம் காத்துவரும் இவரது சேவை போற்றுதற்குரியதே.

25 ஆண்டுகள் பூர்த்தி நிலையில் அரங்கம் காண சிறப்பாக நடைபெறவும், தொடர்ந்து அவரது பணி சிறப்புறவும் எம்பெருமானை வேண்டுகின்றோம்.

சுவாமி. **ஸ்வஸ்தானந்தா**
ஸ்ரீ லலிதாம்பிகை தேவஸ்தானம்,
விளாங்குமலை,
கன்னியா, திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரனின் இராஜரெட்ணம் நடனாலயம் தனது இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழாவினைக் கொண்டாடுவதையிட்டு இவ் ஆசியுரையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் திருமலையில் தலை சிறந்த நடன ஆசிரியை என்றால் மிகையாகா. இவரின் சாதனைகள் அளப்பெரியன. இவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் பல்கலைக் கழகங்களிலும் வெளிநாடுகளிலும் சிறப்புப் பெற்று விளங்குவதைக் காணலாம். "அரச நடன விழா" எழுவானில் சக்தி தொலைக்காட்சி நடாத்திய "சாஸ்திரிய நடன விழா" போன்றவற்றில் மாணவர்களைப் பங்கு பற்ற வைத்து முதலாம் இடங்களைப் பெற்று திருக்கோணமலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் சர்வதேச ஜெயாஞ்சலி நடனக் காவியத்தின் மூலமாக பல மாணவர்களைப் பங்கேற்க வைத்தவர். அந்த வகையில் இலங்கை மாணவி செல்வி. ஜெயபாலன் பபித்தா பிரித்தானியா வரை சென்று பெருமை சேர்த்துள்ளார். இவரது நடனக் கல்வியகத்திற்கும், பல பட்டங்களுக்கும் சொந்தக்காரி. அந்த வகையில் "நாட்டியாஞ்சலி விருது", "தொண்டைமான் நாட்டிய வித்தகி விருது", காளிகோயில் பிரதம குருவினால் வழங்கப்பட்ட "இசை நடன நவரத்தினா விருது", நகர முதல்வரால் வழங்கப்பட்ட "அபிநய ஆசான் விருது", இலங்கை வங்கியினால் "பெண்களுக்கான சாதனையாளர் விருது" போன்ற பல விருதுகளுக்குச் சொந்தக்காரி திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரனின் "இராஜரெட்ணம் நடனாலயம்" மேலும் மேலும் சிறப்புப் பெற்று சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமான் அருள் புரிவாராக.

**சி. ஆனந்தசிவம்**
அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரமனும் பரதமும்

கலைகள் பலவற்றிற்கும் அடிப்படையாகவும் ஆதியாகவும் உள்ளது ஆடற்கலை. உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உடற்கூறுகள் வழியாகப் புலப்படுத்துவதே இக்கலையின் பண்பாகும். பார்ப்போரின் உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சிகளை எழுப்புவதால் இக்கலை நுண்கலை எனப் போற்றப்படுகின்றது. மனிதன் உலகில் தோன்றிய நாள் முதல் தன் மன உணர்வுகளை இன்பத்தை நடனத்தால் வெளிப்படுத்தி வைத்திருப்பதை நாமறிவோம். உலகில் நடனமாடாத இடமும் இல்லை. மக்களும் இல்லை.

தன்னிலும் மேலான சக்திகளை தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மனிதன் ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கிறான் என்பதை சங்ககால நூல்களிலிருந்து அறியக்கூடியதாகயிருக்கிறது. வெறியாட்டு, துணங்கை, குரவை போன்றவற்றை சங்க நூல்கள் எடுத்தியம்புகின்றன. இப்படி புராதன மக்களால் ஆடப்பட்ட நடனங்கள் நாட்டார் நடனங்கள் எனவும் மக்கள் நாகரிகமடைய வளர்ச்சி பெற்று சாஸ்திரி நடனங்கள் எனவும் பெயர் பெறலாயின.

அண்ட சராசரங்களை எல்லாம் இயக்கும் பரம்பொருளின் ஆடலைப் புலப்படுத்தும் கலை வடிவே நடனமாகும். நடனத்தினூடாகக் காலங்கடந்த தத்துவப் பொருளைக் காணமுடிகிறது. ஓசை ஒழுக்குடைய சந்தத்திற்கமைய இறைவன் அசைந்தாடும் பொழுது அண்டசராசரங்கள் அனைத்தும் இயங்குகின்றன.

இறைவன் இசைவடிவம்; நாதப்ரம்மம்; அவன் அசைந்தால் அசையும் அகிலம்; அவனது இசைவும் அசைவும் நின்றால் உலகமே அடங்கி விடும். நடனப் பாரம்பரியம் சிவனிடமிருந்தே ஆரம்பிக்கின்றது. ஆடலரசனாகிய சிவன், நடராஜன், அம்பலத்தாடி, நடனசபாபதி, தில்லைக்கூத்தன், விண்ணகக்கூத்தன் எனப் பலபெயர் பெறுகின்றான்.

தென்முகக் கடவுளாகிய "தட்ஷணாமூர்த்தி" மோனத்திலிருந்து பின் எழுந்து நின்று ஆடத்தொடங்கியதும், அவனது கையிலிருந்த உடுக்கையில் இருந்து எழுந்த "ஓம்" என்னும் பிரணவ ஒலியிலிருந்து அண்டசராசரங்கள் எல்லாம் தோன்றின என்றும் அவனுடைய நடன அசைவுகளால் தான் உயிரினங்கள் தோன்றின என்றும் புராணங்கள் கூறுகின்றன.

சிவனின் ஆடலை நாட்டிய வேதமாக பிரமன் பரத முனிவருக்குப் போதிக்க அவர் கந்தருவர்கள் தேவமாதங்களுடன் சிவன் முன்பாக நடனமாடினார். பரதரின் நாட்டியத்தில் இடம்பெறாத லாஸ்யத்தை பார்வதி தேவி மூலமும் தானாடிய தாண்டவத்தை தாண்டு என்னும் முனிவர் மூலமும் கற்றுக் கொடுக்கச் செய்தார். பரத முனிவர் இவற்றை விளக்கி நாட்டிய சாஸ்திரத்தை எழுதினார்.

பார்வதி தேவியார் லாஸ்யத்தை பாணாசுரனின் மகளான உஷா தேவிக்கு கற்பிக்க, அவற்றை துவாரகையில் இருந்த கோபியர்க்கு உஷாதேவி சொல்லிக் கொடுக்க இக்கலை உலகில் பல நாடுகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டதாக **Indian Inheritance** என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

ஆண்மையின் கம்பீரத்தை சித்தரிப்பது தாண்டவம். பெண்மையின் மென்மையைப் புலப்படுத்துவது லாஸ்யம். சிவபிரானின் பல்வேறு விதமான தாண்டவங்கள் பற்றி ஆகம நூல்களும் திருமுறைப் பாடல்களும் விதந்துரைக்கின்றன.

திருமுறைகள் காலத்தால் அழியாதவை. திருமுறை என்பது தமிழ் வேதம். வேதத்தில் சொல்லப்பட்ட அனைத்தும் திருமுறைகளில் உண்டு. ஆகமத்தில் குறிப்பிடப்பட்டவை அனைத்தும் திருமந்திரத்திலுண்டு. 10ம் திருமுறை திருமந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு நிலைக்களனாய விளக்கும் திருமுறைகளில் காலத்தால் முந்தியது திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் தமிழ் ஆகம நூல் 3000 பாக்கள் கொண்ட திருமந்திரத்தில் ஏறக்குறைய 800 பாடல்கள் சிதம்பரத்தின் பெருமையையும் நடராஜரின் ஐந்தொழில் இன்பக் கூத்தினையும்விதந்தோதுகின்றன.

திருமூலர் கண்ட திருக்கூத்து அற்புதமானது, ஆனந்தமானது, அக்கூத்தினை சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என ஐந்து வகைப்படுத்திக் கூறுவர்.

அண்டசராசரங்களை எல்லாம் சிவனின் திருமேனி, எங்கும் சிவசக்தி, எல்லாம் அவன் ஆடல் புரியும் அம்பலமாம் சிதம்பரம், எங்கும் அவன் திருநடனம், எங்கும் அவன் சிவனாய் விளங்கினான் என்பதை திருமூலர்,

**"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி**
**எங்கும் சிதம்பரம் எங்கும் திருநடனம்**
**எங்கும் சிவமாயிருத்தலால் எங்கெங்கும்**
**தங்கும் சிவனருட்டன் விளையாட்டே"**

என்று அருளியிருக்கிறார்.

எம்மிறைவனாம் பரமன் ஆடும்போது வேதங்கள் ஆடுகின்றன. ஆகமங்கள் ஆடுகின்றன. கீதங்களாகிய ஒளிவடிவுலகு இயங்குகின்றது. பூதங்களும் புவனங்களும் அண்டங்கறும் ஆடுகின்றன. அண்ட வெளியில் எப்போதும் ஆடிக்கொண்டிருக்கும் "திருவாதிரை" நடராஜரின் நட்சத்திரமாகக் கொள்ளப்படுகின்றது. "ஆதிரையான்" அவனது சிறப்புப் பெயர்களில் ஒன்று.

ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் செய்யும் அற்புத வடிவமே நடராஜா மூர்த்தம்.

**அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்**
**அரன் அங்கி தன்னில் அமையிற் சங்காரம்**
**அரனுற்றமைப்பில் அமரும் திரோதாயி**
**அரனடி என்னும் அனுக்ரகமே**

(திருமந்திரம் 2573)

தெய்வத் தமிழிசையின் தாய் என்று போற்றப்படுபவரும், கணவராலே தெய்வம் எனப் போற்றப்படும் பெருநிலையடைந்தவரும் "அம்மை" என சிவனால் அழைக்கப்பெற்ற பேறு பெற்றவருமாகிய காரைக்கால் அம்மையார் இறைவனின் திருநடனத்தைப் பார்க்க ஆவல் உற்றார்.

ஆண்டவன் தன்னகத்தில் குடியிருக்கிறார் என்ற ஞானநிலையில் தன் அழகிய வடிவைத் துறந்து என்புருவாகிய உடம்பை இறைவனிடம் வேண்டிப் பெற்றவர்.

என்புருவாகிய பேயுருவில் காற்றிலும் கடிதாக கைலைக்கு செல்கிறார். தலையினால் நடந்து செல்கிறார். உமையவள் வரும் என்புரு யாரெனக் கேட்க, "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" என்கிறார். இறைவன், அம்மையே உமக்கு என்ன வேண்டும் எனக் கேட்க, அப்பா எனப் பணிந்த அம்மையார்,

**இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகிறார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும்போது உன்னருகில் கீழ் இருக்க என்றார்"**

என வேண்டினார் என்கிறது சேக்கிழார் புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அம்மையார் "அப்பனே! உன் திருநடனக் கோலம் காட்டியருள்க" என வேண்டவும் இறைவன் "திருவாலங் காட்டிற்கு வா" என கட்டளையிட்டு ஆடுமா நடமும் கண்டு ஆனந்தம் சேர்த்து எப்போதும் பாடுவாய் நம்மை" என அருளிச்செய்தார்.

திருவாலங்காட்டில் கூத்தபிரானின் ஞானக்கூத்தைக் கண்ணாரக் கண்டு திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடி மகிழ்ந்தார். பேரானந்த நிலையில் அம்மையார் பாடிய முதல் மூத்த திருப்பதிகமான "கொங்கை திரங்கி" நரம்பெழுந்து என்று தொடங்கும் பதிகத்தில்

தாழ் சடை எட்டுத்திசையும் வீசி
சங்கங் குளிந்தனலாடு மெங்கள்
அப்பனிடம் திருவாலஸ்காடே
என வியந்து வணங்குகிறார்.

இவரது கையிலும் தாளம் இருந்ததைச் சிற்பங்கள் சுட்டி நிற்கின்றன. இறைவனது ஆடலுக்கு அக்காலத்தில் இசைக்கப்பட்ட இசை பற்றியும் இசைக்கருவிகற் பற்றியும் அம்மையார் எடுத்தியம்புவதைப் பார்க்கலாம்.

துத்தம் கைக்கிளை விளரி தாரம்
உழை இனி ஓசை பண் கெழுமம்பாடி
சச்சரி கொக்கரை தக்கையொடு
தகுணிதம் துந்துபி தானம் வீணை
மத்தளம் கரபுகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரைவினோடாடும் எங்கள்
அப்பாவிடம் திருவாலஸ்காடே
(மூத்த திருப்பதிகம் 09)

இப்பாடலினூடாக பண்டைத் தமிழிசையில் கையாளப்பட்ட இசை இசைக்கருவிகள் தாளக் கருவிகள் பற்றி அறியமுடிகிறது. தெய்வத் தமிழிசைத் தாய் என காரைக்கால் அம்மையாரை விழிப்பது சாலப் பொருத்தமானதே. அம்மையாரின் பாடல்கள் 11ம் திருமுறையில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இது தவிர தேவார முதலிகளும் தமது பதிகங்களில் இறைவனது நடனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் ஈண்டு நோக்கற் பாலது.

ஞானக் குழந்தையாம் சம்பந்தர் பல பாடல்களில் பரதம் ஆடும் பரமனைப் போற்றுகின்றார். அவற்றில் ஒன்று.

"ஆடினாய் நறு நெய்யொடு பால்தயில்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம் நாடினாய்"

தில்லையில் அருளிய திருப்பதிகத்தில் ஆனந்த நடனக்கூத்தை அழகாகக் காட்டுகிறார். வாகீசரான நாவுக்கரசர் என்பதனை

"விருத்தனாய் பாலனாகி விரிநிலா எறிக்கும் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ் செய்ய நீண்ட புன்சடைகள் தாழக்
கருத்தனார் தில்லை தன்னுட் கருது சிற்றம்பலத்தே
அருத்தமா மேனி தன்னொடு அனலெயி ஆடுமாறே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணூட் மாலவனும் என்னும் பதிகத்தில்

"திண்ணுண்ட திருவே மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலொடும் பரம நீயாடுமாறே"

பாடல்கள் மூலம் அறியலாம்.

திருநடனம் கண்டு பரவசமடைந்த அப்பர் சுவாமிகளும் "குனித்த புருவமும்" என்னும் திருநேரிசையில் (4ம் திருமுறை) இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப் பிறவியையே மீண்டும் வேண்டுகின்றேன் என காரைக்கால் அம்மையார் போன்று இறைவனிடம் மனிதப் பிறவியை வேண்டுவது பரதமாடும் பரமனின், அழகையும் அருளையும் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறதன்றோ! சுந்தரமூர்த்தி நாயனார் "மடித்தாடும் அடிமைக்கான தன்றியே" எனத் தொடங்கும் திருப்பெற்றப்புலியூர் பதிகத்தில் இறைவனது திருநடனத்தை

"கருத்தாடும் கரதலத்தில் டமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்து
எம்பெருமானைப் பெற்றம் அன்றோ"

எனப் பாடிப் பரவுகின்றார்.

திருத்தில்லையில் நிருத்த தரிசனத்தை கண்டு அகங்குழைந்த மணிவாசகப் பெருமான் கண்டபத்துப் பதிகத்தில்

"பூதங்கள் ஐந்தாகி புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கொடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தின்
வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே"

என்றேத்துகின்றார்.

திருவிசைப்பா பதிகங்கள் இருபத்தெட்டில் பதினைந்து பதிகங்கள் கோயில் என சிறப்பாக போற்றப்படும் சிதம்பரத்துக்குரியன. இவை சிதம்பர நடேசரின் திருக்கூத்தையும் பெருமையையும் விதந்துரைக்கின்றன. அவற்றுள் ஒன்றிரண்டை நோக்குவோம். கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பாவில்

துந்துபி குழல் யாழ் மொந்தை வானியம்ப
தொடந்திருடியர்களும் துதிப்ப
நந்திகை முழம் முகிலென முழங்கை
நடம்புரி பரமர் தம் கோயில்
அந்தியின் மறை நான் கரணம் பெறவும்
அரும் பெறன் மறைபொருள் மறையோ
சிந்தையிலரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே

என ஆனந்த நடராஜரை நம் கண்முன்னே காட்டுகிறார்.

பூந்துருத்தி காடவ நம்பி தன் பாடல் ஒன்றில்

பாடகமும் நூபுரமும் பல் சிலம்பும் சேர்ந்தொலிப்பது
ஆடகக்கை நல்லார் தொழுதேத்த தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தான் மேய்ந்தமைந்த அம்பலனின் ஆடரங்கே

என ஆடல்வல்லானின் அம்பலக்கூத்தை ஆராதிக்கின்றார்.

சேக்கிழார் பெரிய புராணத்தில் நாயன்மார்கள் தில்லைக் கூத்தனின் திருநடனம் கண்டு அடைந்த இன்பத்தை இவ்விதம் எடுத்தியம்புகின்றார். சுந்தரமூர்த்தி நாயனார் கண்ட தில்லைக் காட்சியையும், திருநாவுக்கரசு நாயனார் திருநடனம் கண்டு அகம் குழைந்து நின்ற பரவச நிலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாக குணமொரு மூன்றும்
திருந்து சாத்வீகமேயாக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங்கூத்தில்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உற்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலி தாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவிந்து
பண்ணினால் நீடி அறிவரும்
பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்
எனப் போற்றிப்பாடியுள்ளார்.

வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள், திருமுறைகள் தொழுதேத்திய ஆனந்த நடராஜரின் அற்புதக் கூத்தினையும், பரதம், ஆடிய பரமனையும் போற்றி பின் வந்த தமிழிசைப் புலவர்களும் இசை அறிஞர்களும், வாக்கேயக்காரர்களும் பல பாடல்கள் எழுதியுள்ளனர்.

நாட்டியத்தின் வளர்ச்சியிலே பலவிதமான நாட்டிய உருப்படிகள் தோன்றலாயின. மல்லாரி, கவுத்துவம், பதம், கீர்த்தனை, தில்லான போன்றவற்றில் பெரும்பாலானவை நடராஜப் பெருமான் மேல் பாடப்பெற்றவை. நடனத்தின் தலைவன் நடராஜர் தான்.

அன்று கோயில்கள் கலைகளை வளர்த்தன. கோயிலின் நடனமாதர் நடனமாடினர். இடைக்காலத்தில் இவ்வழக்கம் இல்லாதொழிந்து தற்போது இறைவன் எழுந்தருளும் போதும், கோயில் திருவிழாக்களில் கலைநிகழ்ச்சிகளிலும் நடனம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இது மட்டுமன்றி சிவ தாண்டவம், சிவ பார்வதி நடனம் போன்ற நல்ல சாஸ்திரிய நடனங்கள் மிகப்பெரிய ஊடகமான சினிமாவிலும் சிறந்த நடனக் கலைஞர்கள் ஆடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சினிமா ஊடகத்தின் மூலம் இக்கலை எல்லா மக்களையும் சென்றடைந்துள்ளமை மறுக்கமுடியாத ஒன்றாகும்.

பரமன் ஆடிய பரதமாம் ஆனந்த நடனம் கண்டு இன்புற்று அடியவர்கள் ஆனந்த தாண்டவம் பற்றி எடுத்தியம்பிய எண்ணிலடங்காப் பாடல்களில் ஒரு சிலவற்றை எடுத்துக்காட்டி நடனமே நடராஜன் வடிவம் என்பது பற்றி என் சிற்றறிவுக்கு எட்டிய அளவில் சிறு கட்டுரையாக வடித்துள்ளேன். இன்னும் நடராஜ தத்துவம் பற்றிய நூல்கள், பாடல்கள் பலவுள. அவற்றை தேடி எடுத்து ஆனந்த நடமிடும் பாதனின் அற்புதக் கூத்தை அனுவிக்க வேண்டியது எம் எல்லோரின் கடமையாகும்.

ஆனந்தக்கூத்தனின் அற்புதக்கூத்தினைப் பாடுவோம்! பரவுவோம்! பணிவோம்!!!

திருமதி. **தேவிகாராணி முருகுப்பிள்ளை**
சங்கீத கலாவித்தகர், கலாபூஷணம்
ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

நாட்டியக் கலை என்பது பண்பு, பண்பாடு, கலை கலாசாரம் முதற் கொண்டு மரபுவழியான ஒழுக்கங்கள் குழந்தைகளிடையே சிறப்பாக வளர்வதற்கு உதவும் மார்க்கங்களுள் ஒன்றாகும்.

ஆடற்கலை என்பது கற்போரையும், மற்றோரையும் அகத்தும் புறத்தும் நெறிப்படுத்தவல்லது. உணர்வு சார்ந்து இயங்கும் மனிதன் அறிவியல் கட்டுப்பாட்டினை இழக்காமல் இருக் வேண்டிய வாழ்க்கையின் நெறிமுறையை பாவமும் தாளமும் ஒருங்கிணைந்த ஆடற்கலை பயிற்றுவிக்கின்றது.

மொழி உருவாக முன்னரே ஆதிமனிதன் தன் எண்ணங்களை நடனம் மூலம் வெளிப்படுத்தினான். அன்னையின் கர்ப்பத்தில் இருக்கும் போதே குழந்தையின் உணர்வுகள் மீட்டப்படுகின்றன. குழந்தை பிறந்து வளரும் போது இவ்வுணர்வுகள் வளர்ந்து வளர்ச்சியடைகின்றன.

இன்று உலகெங்கும் ஆடலரங்குகள் உருவாகி செயற்பட்டு வருகின்றன. பல நடன ஆசிரியர்கள் நடன மன்றங்களை உருவாக்கிப் பல மாணவர்கட்குப் பயிற்சி அளித்து வருகின்றார்கள். அந்த வகையில் திருமதி. தேணுகாதேவி செல்வபுத்திரனும் பரதத்தை நெறிதவறாது கற்பித்து வருகின்றார். 1991ம் ஆண்டு திருகோணமலையில் இராஜரெட்ணம் நடனாலயம் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி மிகுந்த நம்பிக்கையுடன் காலடி எடுத்து வைத்து 25 ஆண்டுகளை கடந்து பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இக் கலாலயத்தின் ஸ்தாபகர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் ஒரு நாட்டியக் கலைமணி. பாவம், இராகம், தாளம் மூன்றையும் இணைக்கும் பரதக் கலையை அதன் தனித்துவம், அங்க சுத்தம், லய சுத்தம் என்பவற்றை துல்லியமாக மாணவர்கட்கு பழக்குவதில் தனித்திறமை படைத்தவர். இவரது மாணவர்களின் நிகழ்ச்சிகளில் இவற்றை நாம் கண்கூடாகப் பார்க்கலாம்.

திருகோணமலையில் இவரது கலைப் படைப்புக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. பல படைப்புகளை அரங்கேற்றியுள்ளார். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் திருக்கோணேஸ்வரரது வரலாறு கூறும் "தென்கயிலை வாசா" என்னும் நாட்டிய நாடகம் ஒரு ஆவணப்பதிவாக நவரசங்களையும் உள்ளடக்கி நாட்டிய நாடகத்தில் வரும் பாத்திரங்களை நம் மனதில் ஆழப் பதித்து என்றும் நினைவில் நிறுத்தி வைத்துள்ளமையை விதந்து குறிப்பிடலாம்.

மேலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், போட்டிகளிலும் இவரது மாணவர் பங்கு பற்றியும் வெற்றி பெற்றும் திருகோணமலைக்கு பெருமை தேடித் தந்துள்ளார்கள். இவர் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலங்களிலும் நாட்டிய நிகழ்ச்சிகளை தயாரித்து அளித்துச் சாதனை படைத்துள்ளார்.

பல நடனமணிகளை உருவாக்கிய பெருமை பெற்ற ரேணுகா செல்வபுத்திரன் அவர்களின் சிஷ்யர்கள் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் சிறந்த நாட்டிய நர்த்தகிகளாகவும், நடன ஆசிரியர்களாகவும் மிளிர்ந்து தம் குருவிற்கும் தாய் நாட்டிற்கும் பெருமை சேர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

பல சோதனைகளைக் கடந்து சாதனை படைத்து மிடுக்கோடு நிற்கும் இராஜரெட்ணம் நடனாலய நிர்வாகி திருமதி. ரேணுகாதேவி அவர்கள் பெற்ற விருதுகள் பலப்பல. தனது இல்லறத்தினையும் நல்லறமாக நடத்திக் கொண்டு தன் துணைவரின் ஆதரவுடன் கலைச்சேவையையும் செய்து கொண்டிருக்கும் சிறந்த நடன ஆசிரியர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் மேலும் பல சாதனைகள் புரிந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏன் சர்வதேசத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும். அவர் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

"வாழ்க அவர் கலைச்சேவை
வளர்க அவரது நடனாலயம்"

அன்புடனும் நல் ஆசியுடனும்
சங்கீத வித்வான்
திருமதி. **விஜயகுமாரி தவசிலிங்கம்**
இயக்குனர் முத்துக்குமார சுவாமி தேவஸ்தான
இசை நடன கலாலயம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

தென் கைலாயம் என சிறப்பிக்கப்படும் கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணமலை எனும் சிவபூமியிலே ஆண்டாண்டு காலமாக கலை வளர்த்த பெரியார்கள் வாழ்ந்த இம் மண்ணிலே தனது நாட்டியக் கலைப்பணியைத் தொடங்கி வெள்ளி விழாக் காணும் "இராஜரெட்ணம் நடனாலயத்தின்" வெள்ளி விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாகவும் ஐந்தாம் வேதமாகவும் விளங்கும் பரதக்கலை பிரம்ம தேவரிடமிருந்து பரத முனிவர் மூலம் உலகமெங்கும் பரப்பபட்டது. இக்கலையைப் பரப்பும் தெய்வீகப்பணியை ஆற்றும் பரதக் கலைஞர்கள் ,இறைவனின் அருட்கடாட்சம் பெற்றவர்கள். கலைக்காகவே படைக்கப்பட்டவர்கள். அந்த வகையில் தம் பணியைச் செம்மையாக ஆற்றும் திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள் பல் கிளைகளையும் பரப்பி ஆழ வேரூன்றிய ஆலம் விருட்சமாய் நிமிர்ந்து நிற்கின்றார்.

திருகோணமலை மண்ணின் பழம் பெருமையுணர்த்தும் இதிகாசச் செய்திகளை,"தென்கயிலை வாசா" எனும் நாட்டிய நாடகத்தின் மூலம் மக்கள் மத்தியில் கொண்டு சென்று பெருமையீட்டிக் கொண்டவர். இராஜரெட்ணம் நடனாலயத்தின் இருபத்தைந்தாவது அகவை மலரானது இக் கலைஞரின் உன்னத கலைப்பணியை நீண்ட காலம் நிலைத்திருக்கச் செய்யும் என நம்புகிறேன். இக் கலைஞரின் இவ் அரிய பணியானது மேலும் செழிக்க வேண்டுமெனவும் இம் மலரானது சிறப்பாக வெளிவர வேண்டுமெனவும் தென்கைலாய வாசனாகிய மாதுமையம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானை வேண்டி எனது உளம் நிறைந்த ஆசிகளை வழங்குகின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவஸ்ரீ **மு.சண்முகரெத்தின குருக்கள்**
பிரதமகுரு. திருக்கோணேஸ்வரம்,
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

இந்து மதம் காட்டும் பரம்பொருளாம் பரமேஸ்வரனின் சிவ வடிவங்களுள் நடராஜ வடிவம் தனிச்சிறப்புடையது. பஞ்ச சபைகளில் அவன் ஆடும் திருநடனத்தை "ஐவகைமன்று தொறாடிவள்ளல்" எனக் கந்தபுராணம் இயம்புகின்றது. இதில் கனகசபைத்திருநடனமே பிரபஞ்சமாகிய பூமிக்கு மிக முக்கிய நடனமாகும். ஏனெனில் இக்கனக சபை அமைந்துள்ள தில்லைச் சிதம்பரம் பூமத்திய ரேகையின் மையப்புள்ளியில் அமைந்துள்ளதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றார்கள். இதனால் சைவர்களாகிய நாம் திருச்சிற்றம்பலம் சொல்லி வழிபாடுகளை ஆரம்பிக்கின்றோம். ஆடல் அரசனின் ஆட்டம் நிறுத்தப்படுமானால் அனைத்தும் பஸ்மமாகி விடும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்ளும் தலையாயது ஆடற்கலையாகும். முழு முதல்வன் நடராஜனின் தாண்டவத்தில் உதித்த கலை பரதக்கலை. எந்தவொரு சமூகமும் இருப்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டுமானால் கலை, கலாச்சார விழுமியங்களைப் பேண வேண்டும். ஒருகலையை அதன் முழுமை வடிவம் சிதையாது. மறுதலைமுறைக்குக் கொடுக்கும் பணி அத்துறை சார் கலைஞனுக்குரிய மாபெரும் பணியாகும். இவ்வகையில் சிவ பூமியாம் திருமலையில் இராஜரெட்ணம் நடனாலயம் என்ற கலை கூடத்தை உருவாக்கி அதன் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்படும் திருமதி. ரேணுகா தேவி செல்வபுத்திரன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மானப்பெரிது" என்பதற்கொப்ப திருமலை மக்களால் மறைக்கவோ மறுக்கவோ முடியாத சமுதாய உயிரோட்டப் பணியாகும். அவரது முயற்சிக்கு உந்து சக்தியாக ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய ஆசான்கள், கணவர், பெற்றோர்கள், மாணவிகள், மற்றும் உடன் பிறந்தோர்கள் பாராட்டப் பட வேண்டியவர்கள். பல சிறந்த நடனாசிரியர்களை இம்மண்ணுக்குத் தந்த பெருமை இவரையே சாரும். இருபத்தைந்தாவது அகவையில் தடம் பதிக்கும் நடனாலயம் கலாலயமாக உயர்ந்து மேலும் சிறந்த சேவையாற்றவும் அதன் ஸ்தாபகர், ஆசிரியர், மாணவர்கள் கோணநாயகர் அருளால் பதினாறு பேறும் பெற்று பெருவாழ்வு வாழவும் எல்லாம் வல்ல கலியுகத் தெய்வமாம் முத்துமாரியை வாழ்த்தி வணங்கி ஆசி கூறுகின்றேன்.

"சகல உயிர்களும் சுகமாக வாழ்க"

சிவப்பிரம்மஸ்ரீ **நவரெத்ன மயூரத சிவாச்சாரியார்**
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் - பிரதமகுரு
மடத்தடி - திருகோணமலை.

**உலகப் புகழ் பெற்ற உளவியல் நிபுணரான Galpern கோட்பாடுகள் பரத நாட்டியம் ஒன்றில் தான் மிகையாக தென்படுவதாக கூறப்படுகின்றது.**
**- கல்பனா முகுந்தா ஐயங்கார் PHD**

**மூவுலகிலும் வாழ்கின்ற பல்வேறுபட்ட பாத்திரங்களை சித்தரிப்பதே நாட்டியம்**
**-பரதமுனிவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

மனிதவரலாற்றில் இன்பதுன்ப நிகழ்வுகளை அடிப்படையாகவும், தன்னிலும் மேலான சக்தியை மகிழ்விப்பதற்காகவும் கிராமியமக்கள் ஆடிப்பாடி தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தினர். இங்ஙணமாக கிராமிய மக்களால் ஆடப்பட்ட நடனம் நாட்டார் நடனம் எனவும் ஆலயங்களிலே இறைவனுக்காக ஆடப்படும் நடனமாகிய சாஸ்திரிய நடனங்களும் வளர்ச்சிபெற்றன. இந்த நடனக்கலையானது தெய்வீகக் கலையாக சிறப்பிக்கப்படுகிறது. இந்திய நடனப் பாரம்பரியத்தில் சிவனிடமிருந்தே இந்நடனக்கலை ஆரம்பிக்கின்றது என்பர். இதற்குத்தக்க எடுத்துக்காட்டாக நடராஜன், நடனசபாபதி, தில்லைக்கூத்தன் என்னும் பெயர்களால் போற்றப்படுகின்றார்.

இத்தகைய நடனக்கலை சிறப்பினை ஆலயங்களில் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் நடனக்கலையானது தென்னகவரலாற்றில் கோயில்களிலும் இன்றைய காலத்தில் பாடசாலைகள், நடனப்பள்ளிகளிலும் நடனக்கலை வளர்ச்சியில் பங்காற்றியுள்ளனர். இந்தவகையில் திருகோணமலை இராஜரெட்ணம் நடனாலயம் இருபத்தைந்தாவது அகவையில் தனது பணியாற்றி வருவதையிட்டு மகிழ்வடைகின்றேன். இந்நடனாலய ஸ்தாபகராக செயற்படும் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது ஆற்றல்களை நான் நன்கு அறிவேன். இவர் நடனத்துறையில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் நடனக்கலை வளர்ச்சியுற வேண்டும் என்ற முனைப்பின் காரணமாக தனது தந்தையாரது பெயரில் இந்த நடனாலயத்தை நடாத்திவருகின்றார். இவருடைய மாணவர்கள் உள்நாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் நடனத்துறையில் மிகச் சிறப்புற சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே இவருடைய சேவைகள் பலவெற்றிப் பாதைகளைக் கடந்து பாராட்டுக்களைப் பெற்று சிறப்புற வளர கோணேசப் பெருமானின் அருளை வேண்டிநின்று வாழ்த்துகின்றேன்.

**செ.பத்மசீலன்**
அதிபர்
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
தேசிய பாடசாலை, திருகோணமலை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்து அறிக்கை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய தமிழ் மொழியானது இயல், இசை,நாடகம் என்ற முத்தமிழாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டுள்ளது. இந்த முத்தமிழ்கள் மூன்றும் தமிழ் மொழியின் பெருமையினை உலகிற்கு பறை சாற்றுவன. முத்தமிழ்களில் ஒன்றாகத் தான் ஆடற்கலை அமைந்துள்ளது. ஆடலும், பாடலும் ஓரறிவு முதல் ஆறறிவு வரையான அனைத்து ஜீவராசிகளையும் கொள்ளை கொள்ளும் சிறப்பு மிக்கது. "தில்லையிலே ஆடல் அரசன் நடராஜப் பெருமான் தனது இடது பாதத்தைத் தூக்கி ஆடுகின்ற திருநடனத்திற்கமைவாக இந்த அண்ட சராசரங்கள் இயங்குகின்றன" என்று ஆன்றோர்கள் கூறுகின்றனர். "குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயும்" என்ற பாடலின் மூலம் இறை தாண்டவத்தைக் காண ஆவல் கொள்வதாக அப்பர் சுவாமிகள் செப்பி உள்ளார். எனவே எமது கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து, அடுத்த தலைமுறையினருக்கு அதனை ஒப்புவிக்கும் கடப்பாடு தமிழர்கள் அனைவருக்குமுண்டு. 64 கலைகளில் ஒன்றான பரதக்கலையைக் கற்று மாணவர்களை அஞ்ஞான இருளிலிருந்தும் விடுவிப்பதும், இந்துத் தத்துவ ஞானத்தின் பரிபூரணத்தை அடையவும், இக்கலை மகுடமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இப்பரதக்கலையை முறையாகப் பயில்பவர், பயிற்றுவிப்பவர், பார்த்து இரசிப்பவர் என அனைவரும் இறையுணர்வைஅனுபவிக்க வழியேற்படுகின்றது.

அந்த ரீதியில் திருகோணமலை நகரில் பரதக்கலையை முறையாகப் பயின்று மாணவர்களுக்குப் பயிற்றுவிப்பவர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்கள் "இராஜரெட்ணம் நடனாலயம்" என்று தனது தந்தையின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட இக்கலை கூடமானது 25 வருட நினைவைக் கொண்டாடும் முகமாக இக்கலை நூலை வெளியிடுவது ஆடற் கலைக்குரிய சமர்ப்பணமாகவே கருதமுடியும். எனவே இக்கலாலயத்தின் 25 வருட நிறைவு விழாவினையொட்டி வெளியிடுகின்ற "அபிநய லாவண்யா" இந்த நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் தி/ புனித மரியாள் கல்லூரியில் நடன ஆசிரியையாகக் கல்வி கற்பித்த போது இவரது மாணவிகள் பலர் அகில இலங்கை மட்டத்தில் சாதனைகள் பலவற்றைப் புரிந்துள்ளனர். அத்துடன் தற்போதும் இவரின் மாணவிகள் அகில இலங்கை மட்டத்தில் பல சாதனைகளை நிலை நாட்டிக்கொண்டு வருகின்றனர். திருகோணமலையின் சிகரமாம் திருக்கோணேஸ்வரத்தை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட ஆடற்கலையான "தென்கைலைவாசா" அனைவரினதும் பாராட்டைப் பெற்ற ஒரு படைப்பாகும். இவரது கலைப்பணி இன்னும் நீண்ட காலம் தொடர வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

திருமதி. **சுலோசனா ஜெயபாலன்**
அதிபர்
தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி
தேசிய பாடசாலை
திருகோணமலை.

**தென்னிந்திய அழகியல் கலை கோட்பாடுகளை பொருத்த மட்டில் நவரசங்களுக்கு உயிர்ப்பை ஊட்டும் ஒரே சாசனம் பரத நாட்டியமே.**

**(இந்திய அழகியல நூலிலிருந்து Datta J.2008)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Felicitation Message

It gives me great joy to send this message of felicitation the occasion as Mrs.Renuka Selvaputhiran celebrates the silver years of her services as the directress of the cultural institute for dance "Rajaretnam Nadanalayam" Trincomalee.

The other fact which we cannot forget is the achievements and honour she has brought to our school during the tenure of her service in here service in here at St.Marys' College Trincomalee.

She continues her innovative ways to bring about quality to all the performances on stage.

Let me congratulate once again Mrs.Renuka Selvaputhiran on the occasion of the 25 years and pray that the Good Lord will continue to bless and reward.

Rev. **Sr. M.Nirosha A.C.**
Principal
St.Mary's College
Trincomalee.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கலைகள் இறைவன் கொடுத்த கொடைகளும், வரங்களும். இக்கலைகளைப் பெற்ற மனிதர்கள் ஒருவகை கலை களஞ்சிய வைப்பகங்கள். இவ்வாறான வரங்களை பெற்றவர்கள் அரிதிலும் அரிது தங்களை வெறுமையாக்கி தம் செல்வங்களை முன்னிலையில் இருத்த முனைவதும் தன்னிலும் பெரியவர் என்று பெருமை சேர்த்து கொடுப்பதிலும், முற்றும் முற்றுப்புள்ளி வைத்து செயற்படும். திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரனை மனமாற வாழ்த்திப் போற்றுகின்றேன். நாட்டியத் தாரகையாக வலம் வந்து மக்கள் மனங்களைக் குளிர வைத்த ஆசானாக இராஜரெட்ணம் நடனாலய உருவாக்குனராக இன்றும் புகழுடனும் பெருமையுடனும் காலாண்டை பூர்த்தி செய்யும் நாட்டிய கலைமணி, நாட்டிய வித்தகி, இசை நடனநவரத்னா, அபிநய ஆசான்வாழ்க!

வளர்க உம் கலைக்கூடம். உம் சேவை தேவை. உம்மால் உருவாக்கப்படும் நல் உள்ளங்கள் பல் ஆலம் விழுதாக அகிலமும் பரவி பரமன் பணி கலையூடாக வளர, உள்ளத்தின் ஆழத்தில் இருந்து என் வாழ்த்துக்கள்.

அருட்பணி **பா.ஜெயபாலன்** அ.ம.தி
யாழ் அமலமரித்தியாகிகளின்
திருகோணமலை முதல்வர்,
தூய குவாட்லுப்பே, பங்குத்தந்தை.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இது திருமலையின் திருவிழா
தமிழ்த்தலைவன் இராவணேசனின் தாய் மண்ணிலே
சிவபக்தன் இலங்கை வேந்தனின் தவத் தளத்திலே
நாட்டியத்தின் பொருள் தந்த நடராஜன் எனும் தந்தையை
நினைவுகூற, இராஜரெட்ணம் எனும் தன் தந்தை பெயரில்
நடன ஆலயத்தை நிறுவ ஈசனே அருள் தந்து பிரசவித்த
அருங்கொடையே திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் எனும்
திருமலை தவம் கொண்டு தந்த ஆசான்.
சிவ மண்ணிலே நடனத்தின் விழா
என்றால் அது திருமலைக்கே திருவிழா அல்லவா?
நான் உணர்கொண்டு கண்கண்ட நாளிலிருந்து நடனத்தின்
தனித்துவத்திற்காய் தன்னை அர்ப்பணித்த அதியுயர் ஆசானின்
பணிக்கு 25வருடங்கள் என்பது நம் வீட்டின் இளஞ்செல்வங்கள்
திருமண நாளில் விழிப்பது போன்ற ஓர் பேருவகையல்லவா?
சிறப்புற வாழ்ந்து கலையால் உயரத் துடிக்கும் ஒவ்வொருவரிற்கும் தங்கக்
கிரீடம் கிடைத்த உலக சாதனை போல் திருமதி. ரேணுகாதேவியின் கலைப்பயணம்
உதாரணம் காட்டுவது சாதனையென்றால்
மனைவியின் வளர்ச்சியை தன் வாழ்நாளின் பங்காற்றி மகிழ்ந்து
அமைதி பெறும் உண்மையாண்மையின் உதாரணமாய் திரு. செல்வப்புத்திரனின்
அர்ப்பணிப்பும் சாதனையே...
இவ் வெள்ளி விழா பெண்மையின் வளர்ச்சியை புடம் போட்டு ரசிக்கும்
குடும்பத்தைக் காட்சிப்படுத்தும் ஆசானின் பிறந்த வீட்டையும்
ஞாபகப்படுத்தும் ஓர் கொண்டாட்டமேயாகும்.
"அவரின் பணி இத் தரணியுள்ளவரை சிறக்க இச்சிறியோனின் வாழ்த்துக்கள்"

கனிவன்புடன்
**ஐயாத்துரை கஜமுகன்**
சிரேஷ்ட ஊடகவியலாளர்,
நிகழ்ச்சிப்பொறுப்பாளர்
சக்தி தொலைக்காட்சி.

**பாரத கலாச்சாரத்தில் சூடாமணியாக ஒளிவீசுவது நாட்டியக்கலை இது காலத்தால் மூத்தும் இளமை குன்றாத சிறப்புத் தன்மை வாய்ந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

நடனம் என்பது ஒரு கவிதை - அதில்
ஒவ்வொரு அசைவும் ஓர் வார்த்தை

இருபத்தைந்தாவது அகவையில் காலடி பதிக்கும் இராஜரெட்ணம் நடனாலயம் கடந்து வந்த சவால்களும் சாதித்த சதனைகளும் அளப்பரியன என்பதை நாம் அனைவரும் அறிந்ததே.

ஆனால் அந்த நடனாலயத்தை கட்டி எழுப்புவதற்கு அதன் ஸ்தாபகரான திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் மேற் கொண்ட தியாகங்களும் சந்தித்த சோதனைகளும் பலரும் அறிந்திராத புதிரே!

பிரபல அமெரிக்க எழுத்தாளரான **(Zig Zigla)** ஜிக் ஜிக்லா நிறுவனங்களைப் பற்றி கூறிய மேற்கோள் ஒன்று தற்சமயம் நிறைவுக்கு வருகின்றது. **(You Don't Build a Business You Build People And Than People Build The Business)** நீங்கள் நிறுவனங்களை கட்டி எழுப்பவில்லை. நீங்கள் அதற்குரிய மனிதர்களை உருவாக்குகின்றீர்கள். அத்தகைய மனிதர்களே உங்கள் நிறுவனங்களை கட்டி எழுப்புகின்றார்கள். எப்பேற்பட்ட வார்த்தைகள் அவை. உண்மை தான் எனது அன்புத் தங்கையும், உங்கள் நடன ஆசிரியருமான திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள் கட்டியெழுப்பியது இந்த நடனப் பள்ளியை அல்ல. அதன் அடையாளமாக திகழும், உலகெங்கும் பரந்து வாழும் பரத நாட்டிய கலைஞர்களைத் தான்.

இன்றைய இருபத்தைந்தாவது அகவை எட்டியிருப்பது வெறும் கற்களாலும் மண்களாலும் கட்டப்பட்ட நடனப் பள்ளியல்ல. மாறாக அதில் போதிக்கப்பட்ட கலையும் அதைப் பயின்ற கலைஞர்களின் கலை ஆர்வமும் தான்.

கட்புலனாகா அம்சங்களை கட்புலனாக்கும் உத்திகளை தன்னகத்தே கொண்ட பரதக்கலை வெறுமனே பரதநாட்டிய கலைஞர்களை மாத்திரம் உருவாக்குவதல்ல. அது பிரபல விஞ்ஞான மேதையான அல்பட் ஐஸ்ரின் கூறியது போல அந்த இறைவனுக்கு பிரியமான மெய்வல்லுனர்களைத் தான் கலைஞர்களாக உருவாக்குகின்றது. **(Dancers are the Athletes god)**

அப்பேர்ப்பட்ட மெய்வல்லுனர்களான கலைஞர்களை உருவாக்கிய இராஜரெட்ணம் நடனாலயமும், தென்னிலங்கையை பொறுத்த மட்டில் இன்னுமொறு "கலாஷேத்திரா" என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இதன் பணி மென்மேலும் தொடர அந்தக் கோணநாதப்பெருமானின் ஆசிகள் என்றும் உரித்தாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் தன் கலைத்திறனை மேலும் மேலும் வளர்த்து அவருக்கு நிறை வாழ்வைத் தர இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் அன்புடன்
**இராஜரெட்ணம் மகேந்திரராஜா**
உபதலைவர், இராஜரெட்ணம் நடனாலயம்
திருகோணமலை.

**"அறிவை விட கற்பனை தான் புதுமைகளைக் கண்டு பிடிக்க பெரிய அளவில் உதவுகிறது"**
**-ஆல்பார்ட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரதநாட்டியவியல்

புகழ் பெற்ற நரம்பியல் மற்றும் உளவியல் நிபுணரான டாக்டர்.ரெயின் கோல்ட் கெயிலர் என்பவர் தனது பரதநாட்டியமும் விஞ்ஞானம் என்ற கட்டுரையில் நாட்டியம் மனித மூளையின் இரத்த ஓட்டத்தை இரட்டிப்பாக செம்மைப்படுத்தும் முறையையும், அவை மனித கலங்களுக்கு அளிக்கும் ஊட்டச் சத்துக்கள் பற்றிய தகவல்கள் போன்ற ஆச்சரியங்களை வெளியிட்டிருந்தார்.

அதே போல இந்தியாவைச் சேர்ந்த பிரபல நடனக் கலைஞரான ராஜேஸ்வரி செயநாத் பரத நாட்டியத்தை ஒரு எண்கணித சாஸ்திரமாக மறுபுறம் கூறுகின்றார்.

எம் நாட்டியங்களில் வரும் லயம், ரிதம், ஜதி, கால் அடைவுகள் போன்றவற்றில் மறைமுகமாக்கப் பட்டிருக்கும் எண்கணித சாஸ்திரங்களையும், பரத நாட்டியத்தைக் கற்கும் சிறார்களிடையே வழமைக்கு மாறாக காணப்படும் கணிதவியல் மேம்பாடுகளையும் பற்றி அண்மையில் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் கூறியிருந்தார்.

பொதுவாக நாட்டியம் அல்லது நடனம் என்பது இயற்கையாகவே எம்மை ஆட்கொள்ளும் ஒரு கலை. வானொலியில் ஒலிபரப்பாகும் பாடலை ரசித்து ஆடும் குழந்தை முதல் களியாட்டங்களில் குதுகலமாக ஆடும் ஆடவர் வரை நடனம் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு தான் இருக்கின்றது. எனினும் இதை முறையே லயம், ஜதி, ரிதம், தாளம், பாவம்,கால் அடைவுகள் என வகைப்படுத்தி ஆடினால் அது தான் பரதநாட்டியம். ஆனால்அதை முறையே ஆடுவதற்கு அதன் அசைவுகளையும் பாவங்களையும் வெளிப்படுத்துவதற்கும் முறையான பயிற்சி வேண்டும்.

நாட்டியம் என்பது ஒரு விதத்தில் யோகா. "யோகா" என்றால் ஒன்று சேர்த்தல் என்று பொருள்படும். எம் உடலையும் அந்த ஏதொ ஒன்றின் தெய்வீகத்தையும் முறையே ஒன்று சேர்க்கும் முயற்சி தான் இவ் பரதநாட்டியம்.

பரத நாட்டியமும்,யோகாசனமும் ஒரு விதத்தில் இரு துறைகளாக இருந்தாலும் அவை எம் உடலையும் தெய்வங்களின் தெய்வீகத்தையும் இணைக்கும் பாலம் என்கிறார் யோகாசிரியர் டாக்டர் அனந்த பாலயோகி பவானி. உண்மை தான் இந்த இரண்டு கலைகளும் புராதன இந்திய கலாச்சாரத்தின் அஸ்திவாரமாகக் கருதப்பட்ட சனாதன தர்மத்தின் உடமைகள் என்பதையும் அறிவோம்.

நாம் நாட்டியம் ஆடும் வேளைகளில் எம் உடல் உணர்வும் சக்திகள் எல்லாம் எம்மை மறந்து ஒரு வித தியான நிலைக்குள்ளும், எம் கட்டுப்பாட்டுக்குள்ளும் அடிமைப்படுவதின் விளைவாக நாம் தெய்வங்களின் தெய்வீக நிலைகளை உணர்ந்து கொள்ளும் பாக்கியங்களை பலமுறை பெற்று இருக்கிறோம். இதனால் தான் **(The Divine dance of energy in the Univere)** அதாவது உலக சக்திகளின் மூலாதாரத்தைக் கட்டுப்படுத்தும் தெய்வீக நடனத்தை நடராஜர் வெளிப்படுத்துகின்றார் என நாம் கருதுகின்றோம்.

உண்மையிலேயே நாட்டியம் ஒருநடன மங்கையினிடமோ, நடனம் ஆடுபவரிடமோ மூன்று விடயங்களை ஆட்கொள்ளும். அதாவது அவரது உடல், உள்ளம், மற்றும் அவரது உணர்வு. இதை ஆன்மீக ரீதியாகச் சொன்னால் அது தவம். அதனையே விஞ்ஞான ரீதியாகச் சொன்னால் அது தியானம். **(Medictation)**

அன்றைய காலங்களில் வாழ்ந்த சித்தர்களும் ஞானிகளும், யோகிகளும், முனிவர்களும் பல ஆண்டுகளாக தவம் புரிந்து இறைவனை நேரில் கண்டு பல வரங்களைப் பெற்றதாக நம் புராணங்கள் கூறுகின்றன. ஆனால் நாம் சில நிமிடங்களிலே ஆடும் இந்த பரத நாட்டியத்தில் எந்த வித தவங்களும் இன்றி இறைவனை இலகுவாக உணரலாம் என்பது உண்மை. ஆனால் வரங்கள் பெறலாம் என்பதில் எந்தவித உத்தரவாதமும் இல்லை.

**இராம. பிரசாந்**
**BSc, MA, MSc**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வாணியின் அருள் வேண்டி...
பரத நாட்டியத்தின் வைரமாய்
கலைக்குள் ஓர் வித்தாய்
திருமலையின் ஓர் மகுடமாய்
தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு சொத்தாய்
அழியாத நடனக் கலைதனை
அள்ளி, அள்ளி வழங்கிடும்.....

திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஆண்டவனால் நிகழ்த்தப்பெறும் அற்புதமான ஆனந்த தாண்டவத்தின் - பங்கான பரதக் கலைதனை திறம்படக் கற்று தான் பெற்ற இந்தக் கலையின்பத்தை தம் பிரதேச மாணவர்கள் பெற்று இன்புற வேண்டு என்ற உயரிய சிந்தனையை மனதிலே நிறுத்தி, தம்மை வாழ வைத்த திருமலை மண்ணிலே பல நடன தேவதைகளை உருவாக்கியவர்.

மாணவர்களின் வளர்ச்சி, உயர்ச்சி, புகழ்ச்சி, எல்லாவற்றையும் ஆட்கொள்ளும் தன்மை இந்த நடனக்கலைக்கு உண்டு. கல்வி என்பது கடமை மட்டுமல்ல, கலையும் கூட என்பார்கள். மீட்டாத வீணையை மீட்டிப் பார்ப்பதைப் போல் மாணவர் மத்தியில் மறைந்து கிடக்கும் திறன்களை கலையுணர்வால் தட்டிவிட்டு புதுமை சேர்த்த, சேர்க்கும் அறிவியலாளர்களில் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரனும் ஒருவராவார்.

திகலூட்டும் நடனக்கலையின் மூலம் திருமலை மண்ணில், நடனம், நாட்டிய நடனம் மூலம் பல மட்டங்களைத் தன்னகத்தே ஏற்று பழமையையும், புதுமையையும், தன் படைப்பாற்றலாக்கி நாட்டியக் கலாமணி எனும் சிறப்புப் பெயருடன் அறிவும், ஆற்றலும், அடக்கமும் மிக்க இவரது நெறியும், இவர் கற்பிக்கும் இராஜரெட்ணம் நடனாலயமும் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் இந் நேரத்தில் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

"வாழ்க என்றும் வளமுடன்...
வளர்க நின் பரதம்..."

**வேலாயுதம் தயாபரன்**
**East Link Communication,**
**Vishnu Book Shop**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எப்படியும் வாழ்ந்து போவோம் என்று வாழ்வது வாழ்வல்ல. இப்படித் தான் வாழ வேண்டுமென்ற நெறி நின்ற வாழ்வே வாழ்வாகும்.

நற் சிந்தனைகளும் நல்நோக்கும் கொண்டு வாழ்பவர்களே சாதனையாளர்களாகவும், வல்லவர்களாகவும் மதிக்கப்படும் மனிதர்களாகவும், குருவாகவும் கண்டு வணங்கி அவர்களது பெருமை பேசி மகிழ்கின்றது உலகம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

மிகவும் சுருக்கமாக வள்ளுவர் பெருமான் தனது திருக்குறலில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

சமய நெறி நின்று வாழ்வோரையும் சைவசமயப்பதிகங்களைத் தந்த சமயக் குறவர்களையும் கடவுளுக்கு அடுத்த படியாக மதித்து வணங்குகின்றோம்.

கல்வியின் மேம்பாட்டிற்கும் கலைகளின் உயர்விற்கும் நடனக் கலையின் வளர்ச்சிக்கும் முன்னின்று பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களையும் அதற்குரிய மரபு முறைகளுக்கு அமைவாக வணங்குகின்றோம்.

ஆய்வு செய்து மறைந்திருந்த இசையின் நாதத்தை "யாழ் நூல்" கொண்டு வெளிப்படுத்திய சுவாமி விபுலானந்த அடிகள் கலைப் பொக்கிஷமாக நின்று சாதனை படைத்தார்.

நடனக் கலையின் வளர்ச்சிக்காக தன்னை முற்றாக அர்ப்பணித்து தனது ஆளுமையினால் திருகோணமலையில் நடனக்கலையை சாஸ்திர முறையாக கற்பித்து திருகோணமலையில் முதலிடம் பெறும் சாதனைகளை தேடித் தந்த திருகோணமலையின் தவப்புதல்வி அமரர் இராஜரெட்ணம் அவர்களது மகள் திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் வெள்ளி விழா கண்டு தமது சாதனைக்கு மகுடம் சூட்டியுள்ளார்.

அவரது தூய்மையான நேர்மையான ஆளுகையில் மேலும் பல விழாக்களை கண்டு மகிழும் வாய்ப்பினை தந்து அருளுமாறு திருக்கோணேசப் பெருமான் பாதம் பணிந்து வேண்டுவோம்.

திரு. **இ.சோமசுந்தரம்**
அகில இலங்கை சமாதான நீதவான்

**ஒரு துளி லாஸ்யத்தால் தேவியும் ஒரு துளி தாண்டவத்தால் கணங்களுடன் ஈசனும் திருப்தி அடைகிறார்கள்.**

**-அபின வகுப்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

தெட்சண கைலாசம் எனப் போற்றப்படும் திருகோணமலையிலே ஆடவல்லான கோணைநாதனின் அருள் பெற்று ஆடற்கலையாம் பரதக்கலையை அதன் புனிதத் தன்மை குன்றாது வளர்த்துவரும் இராஜரெட்ணம் நடனாலயம் தனது 25 அகவை நிறைவு செய்து வெள்ளி விழா காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நடனாலயமானது மேடை நிகழ்ச்சிகளாகட்டும், போட்டிகள் ஆகட்டும் அதற்கு ஏற்றவாறு தாள, லய, சுருதி மாறாது ஆங்கிக, வாச்சிக, ஆகார்ய, சாத்வீக அபிநயங்களின் பொருத்தப்பாட்டுடன் நிருத்த, நிருத்திய தன்மைகளை வெளிப்படுத்தி பாவ, ராக, தாளம் இணைந்த பரதத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது என்றால் இது வெறும் புகழ்ச்சியல்ல.

மேற்படி நடனாலய ஆசிரியர் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரனின் நெறியாள்கையில் மிகவும் அற்புதமான நிகழ்ச்சிகளை, திருமலையில் மட்டுமல்ல இலங்கை பூராகவும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. இந்நடனாலயத்தின் மூலம் திருகோணமலை மக்கள் பெருமிதம் கொள்ளும் வண்ணம் கலாச்சார திணைக்களத்தினால் நடாத்தப்படும் அரச நடன விழாவில் விருதுகளைப் பெற்றுத் தந்துள்ளனர். மண்ணோடு மண்ணாகாமல் அதை ஒரு நாட்டிய நாடகமாக உருவாக்கிய பெருமையும் இவ்வாசிரியரையும், நடனாலயத்தையுமே சாரும்.

இவ்வாறு பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வரும் நடனாலயமானது நூற்றாண்டு கண்டு மென்மேலும் விருதுகளும் புகழும் பெற்று தனது கலை சேவையை தொடர நடனாலய ஆசிரியர் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்களுக்கும், நடனாலய மாணவிகளுக்கும் இறைவன் சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க தமிழ் ! வளர்க கலை!!

திருமதி. **மா.லதாமங்கேஸ்**
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
திருகோணமலை.

**சலங்கைகள் "கலீர் கலீரென" ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். பதமும் பரதமுமே வாழ்க்கையாகி இருக்க வேண்டும். சலங்கையின் நாதமே சுவாசமாக இருக்க வேண்டும்.**

## சலங்கை

**நம்ம கலாச்சாரப் படி பார்த்தா நாம் அனுபவிக்கின்ற எல்லாமே தெய்வம் தான். சலங்கைக்கு இலக்கணமெல்லாம் இருக்கு. நம்ம சாஸ்திரத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு அதி தேவதை இருக்கு. அப்படி பார்க்கப் போனா சலங்கையோட அதி தேவதை தாரா கணங்கள். சலங்கையில் பார்த்தீங்கனா ஸ்டார் மாதிரிகீறி விட்டிருக்கும் உள்ளே மணியிருக்கும் கீறல் இல்லைன்னா நாதம் வராது. இந்த தாரா கணங்களைத் தான் நாங்க கால்லே கட்டிட்டு ஆடறோம். வலது காலுக்கு இவ்வளவு சலங்கைகள் இடது காலுக்கு இவ்வளவு சலங்கைகள் என்று கணக்கெல்லாம் கூட உண்டாம். அது மட்டுமல்ல எத்தனை கட்டை சுரதியில் பாடகி பாடுகிறாரோ அத்தனை கட்டை சுருதியில் சலங்கையிலும் பேச வேண்டும்.**

**-பத்மா சுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி



தட்சண கைலாயம் என்ற பெருமை பெற்று விளங்குவது திருகோணமலை ஆகும். நாயன்மார் தேவாரம் பாடி புகழ்பெற்ற கோணேச்சர ஆலயம் அமைந்த இப்புண்ணிய பூமியில் மொழி இலக்கியம், கலைகள் யாவும் ஆலயங்களை மையமாகக் கொண்டே தோன்றி வளர்ந்து வருகின்றது.

அந்த வகையில் நாட்டிய கலைமணி நாட்டிய வித்தகி ஆகிய திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களால் 1991ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இராஜரெட்ணம் நடனாலயம் தனது 25 ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் அபிநய லாவண்யா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நடனக் கலையில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றுள்ள திருமதி.ரேணுகாதேவி செல்வபுத்திரன் அவர்களது ஆக்கங்களில் நேர்த்தியும் தூய்மையும் ஒழுங்கும் நிறைந்து பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களாக தனியிடத்தைத் தக்க வைத்து இருப்பதை இராஜரெட்ணம் நடனாலயததின் ஒவ்வொரு நிகழ்விலும் நாம் காணலாம்.

திருகோணமலையில் மட்டுமன்றி மாகாணத்திலும் அகில இலங்கை ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் விருதுகளையும், சான்றிதழ்களையும் பெற்று விளங்கும் இராஜரெட்ணம் நடனாலயம் பலநடன ஆசிரியர்களையும், நடன மாணவிகளையும் உருவாக்கிய, உருவாக்கிக் கொண்டிருக்கும் பெருமை இம் மன்றத்தினைச் சாரும்.

எனவே ஏறத்தாழ 25 ஆண்டுகளாக கிழக்கு மாகாணத்தில் நடன வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கும் இராஜரெட்ணம் நடனாலயமும் அதனை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் சீரிய தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.


திருமதி. **ச.சுகுணன்**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
பட்டிணமும் சூழலும்
திருகோணமலை.


**"கலை வெறும் கூலி வாங்கிக் கொண்டு செய்கிற வேலை அல்ல,
அது கடந்த காலத்தை கண்முன் நிறுத்தி
நிகழ் காலத்தை பதிவு செய்து, வரும் காலத்துக்கு உதவும் ஆயுதம் இது.
ஒவ்வொரு கலைக்கும் கலைஞனுக்கும் பொருந்தும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரத நாட்டியத்தில் மிருதங்க வாத்தியத்தின் பங்கு

சங்க காலம் முதற்கொண்டு தமிழகத்தில் தாள இசைக் கருவிகள் பல்வகைப்பட்டவையாக இருந்திருக்கின்றன என்பது வரலாற்று ரீதியாக, கல்வெட்டுக்களூடாக, கோவிற் சிற்பங்களூடாக அறியலாம். இந்தியாவில் மராட்டியரின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழிசைக் கருவிகளும் அவற்றை முழக்கும் முறைகளும் பெரும் வளர்ச்சியடைந்திருந்தன. இவ்வகையில் மிருதங்கம் என்பது "ம்ருத்+அங்கம்" என்று பொருள் தருகின்ற வடமொழிச் சொல்லுக்கு மண்ணை அங்கமாகக் கொண்டது என்பது பொருள். ஆரம்பத்தில் மண்ணால் உருவாக்கப்பட்டு தோலால் கட்டப்பட்ட மிருதங்கம் காலப்போக்கில் சில மாற்றங்களூடாக இன்றைய காலத்தைப் போல் மரத்தாலான மிருதங்கம் உருவாக்கப்பட்டன.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் மராட்டியின் ஆட்சியில் "மிருதங்கம்" தமிழகத்துக்குள் நுழைந்தது என்பது இசை ஆய்வாளர்களின் கருத்தாகும். அதுவரை பஜனை, ஹரிகதை, மராட்டிய நடனங்கள் ஆகியவற்றிற்கு வாசிக்கப்பட்டு வந்த மிருதங்கம், தஞ்சை வந்த பின் தமிழ் நாட்டின் சங்கீதம், சதிர் ஆட்டம் முதலியவற்றிலும் இடம்பெற்றது. கால ஓட்டத்தில் அது தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்து வேரூன்றி கர்நாடக சங்கீதத்திற்கு லயத்தை கடைபிடிக்கவும் பரதநாட்டியத்திற்குரிய பிரதான லய வாத்தியமாகவும் மிருதங்கம் திகழ்கிறது. கடந்த 250 வருடங்களாக தஞ்சை வழி, புதுக்கோட்டை வழி என இரு வழிகள் கையாளப்படுகின்றன.

ஒரு இனத்தின் பெருமைகளை பறைசாற்றிப்பேசுவது அவ்வினத்தால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்ற கலைகள், கலாச்சாரம், பண்பாடு போன்ற அடையாளங்களே ஆகும். உலகம் பூராகவும் பரவி வாழும் தமிழினம் இம்மூன்றையும் பேணி ஆன்மிக வழியினூடு கலை வழியாக தமது வாழ்க்கை முறைகளை அமைத்து வருகின்றன. தமிழினத்தின் கலைகளில் மிக முக்கிய இடம் வகிக்கும் ஒரு கலை பரதக்கலையுமாகும்.

பரத நாட்டியம் தென்னிந்தியாவிற்கும் குறிப்பாக தமிழ்நாட்டிற்குரிய நடனமாகும். இது மிகத் தொன்மை வாய்ந்தது. இந்தியா, இலங்கை, தமிழர் புலம் பெயர்ந்து வாழும் பிரதேசங்கள் அனைத்திலும் இது போற்றப்படுகின்றது. பரத மா முனிவரால் உண்டாக்கப்பட்டதனால் "பரதம்" எனும் பெயர் கொண்டதாகவும் ப-பாவம், ர-ராகம், த-தாளம் என்ற மூன்றையும் குறித்து நிற்பதால் இது பரதம் என்றும் இதில் பா(b)வம் உணர்ச்சியையும் ராகம் இசையையும் தாளம் லயத்தை நெறிப்படுத்தியும் இருப்பதனால் இந்நடனம் "பரதநாட்டியம்" எனச் சொல்லப்படுகின்றது. பரத நாட்டியம் என்ற பதம் சுமார் 80 வருடங்களாக வழங்கி வரப்படுகின்றது. ஆடற்கலை வடிவம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் உருவாகிய கூத்து, ஆடல், நாட்டியம்,தாசி ஆட்டம், சின்னமேளம், சதிராட்டம், எனப் பல பெயர்களில் இக்கலை வடிவப்பகுதி அழைக்கப்பட்டு வந்தது. தமிழ் நாட்டுக் கோவில்களில் தேவதாசிப்பெண்கள் ஆடிய சதிராட்டத்தின் நெறிமுறைப்படுத்திய வடிவமே பரதநாட்டியமாகும். இந்தியாவின் செவ்விய ஆடல் வகைகளில் ஒன்று இப்பரத நாட்டியமாகும்.

இப்பரத நாட்டியக்கலையானது நடனவிற்பன்னர்களால் காலத்திற்கேற்ப தமக்கேயுரிய பாணியில் சில மாற்றங்களோடு பரம்பரை வழியாக வழிவந்திருக்கின்றது. இம்மாற்றம் புதுமை என்றாலும் பழைமை மாறாத புதுமையாகப் பேணப்படுகின்றது.

பரத நாட்டியத்தில் கைமுத்திரைகள் முதன்மையாகக் கொள்ளப்படும். பாடலின் பொருளை கைமுத்திரைகள் சுட்டிக்காட்டும். கைமுத்திரை வழி கண் செல்லும், கண் வழி மனம் செல்லும், மனம் வழி உள்ளத்தின் உணர்வு செல்லும். இதனைக் கம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைவழி நயனஞ்செல்லக்
கண்வழி மனமும் செல்ல
மனம்வழி பாவம் செல்ல
பா(**b**)வ வழி ரசமும் சேர" எனக் கூறுகின்றார்.

அத்துடன் பரத நாட்டியத்தில் சொல்லப்படுகின்ற கருத்தையோ அதிலுள்ள உணர்வையோ வெளிப்படுத்த வல்லது "அபிநயம்" ஆகும். இதன் மூலம் செய்தியை அல்லது கதையை மற்றவர்க்கு விளக்கும் வகையில் உணர்த்தலாம்.

அலாரிப்பு, ஜதிஸ்வரம், கௌத்துவம் , சப்தம், வர்ணம், பதம், தில்லானா போன்ற உருப்படிகளூடாக பரதநாட்டியம் பேணப்படுகின்றது.

கர்நாடக சங்கீதத்தில் லயத்தைப் பேணுவதில் இராஜாவாகத் திகழும் மிருதங்க வாத்தியம் பரத நாட்டியத்தில் மிகப் பிரதான வாத்தியமாகத் திகழ்கிறது. பரதநாட்டியத்தில் லயத்தைப் பேணுகின்ற வாத்தியமாக மிருதங்கம் திகழ்கின்ற போதிலும் நட்டுவாங்கம் செய்பவர்க்கும், பாடகருக்கும், பரதநாட்டிய வித்தகருக்கும் உறுதுணையாக அமைவதோடு அவர்களை ஒரு குழுவாக லயத்தால் ஒன்று சேர்த்து இயக்கி நிகழ்வில் இலயிக்கச் செய்ய வல்லது.

பரதநாட்டியத்தில் பாவம் **(Bhavam)** மிக முக்கியமானது. நடனக்காரர் காட்டும் முகபாவங்களுக்கு ஏற்ப மிருதங்க சொற்கட்டுக்களை லாவகமாகக் கையாளல் வேண்டும். உதாரணமாக நடனக்காரர் சோகத்தை வெளிப்படுத்தும் போது அநேகமாக சௌக்க காலமாக "தகதிமி", "தகதிமி","தின்,தத்,தின்" போன்ற சொற்கட்டுக்களை வாசித்தும் "ஹாஸ்யம்" என்றால் அதற்கேற்ப நடைகளைக் கொடுத்தும், "வீரம்" என்றால் அநேகமாக கண்டநடைச் சொற்கட்டுக்களை" வாசித்தும் "சந்தோஷம்" எனில் துரித காலத்தில் நடன நடைகளுக்கு ஏற்ற வகையில் வாசித்து நிகழ்வை மெருகூட்ட வேண்டும். அத்தோடு முகபாவங்களுக்கு ஏற்ற வகையில் வாசித்து சத்தத்தை குறைத்தும் கூட்டியும் ஏற்ற இறக்கங்களோடு தேவைக்கேற்ப ஜதிச்சொற்கட்டுக்களை கையாளல் வேண்டும்.

ஒரு நடனக்காரரின் திறமையை ஒரு வர்ண உருப்படியில் கணித்து விடலாம்.வர்ணத்தில் அநேகமாக பாவம், அபிநயம், முத்திரைகள், ஜதிக்கோர்வை நிறைந்ததாக அமையும். வர்ண உருப்படி அநேகமாக 15 நிமிடம் தொடக்கம் 30 நிமிடங்கள் வரை நீளும். மிருதங்கக்காரருக்கும் வர்ணத்திற்கு வாசிக்கும் போது உற்சாகத்தைத் தரும். ஆகவே வர்ண உருப்படியில் உணர்த்தப்படுகின்ற விடயங்களை அபிநய முகபாவங்களுடன் காட்டும் போது எவற்றை விளக்குகிறார்களோ அவற்றை மிருதங்கத்தில் கொண்டுவர வேண்டும். அதற்கு புராணக்கதைகள் பற்றிய ஞானம் லயிக்கின்ற தன்மை அந்நடனத்தோடு அல்லது கலையோடு ஈடுபடுகின்ற தன்மை மிருதங்கக்காரருக்கு இருக்க வேண்டும். ஜதிச் சொற்கட்டுக்களையும் நடைகளையும் மட்டும் வாசித்துக் கொண்டிருந்தால் நடனக்காரரையும் உற்சாகமூட்டாது. இரசிகர்களையும் நிகழ்வு கவராது. மேலும் நடனத்தை, இசையை, சம்பவங்களை மெருகூட்ட வயலின், வீணை புல்லாங்குழல் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எவ்வகை வாத்தியம் இல்லாவிடினும் மிருதங்கம் இன்றி ஒரு பரதநாட்டிய நிகழ்வு அமையாது.

அலாரிப்பு, ஜதிஸ்வரம் போன்ற உருப்படிகளுக்கு கை,கால்,கண் உறுப்புகளின் அசைவுகளுக்கு ஏற்ப அதற்கேயுரிய ஜதிக்கோர்வைகளை அழகுறக்கொடுத்து வாசித்தல் மிருதங்கக்காரரின் திறமையில் தங்கியுள்ளது. அது போலவே "தில்லானா" எனும் உருப்படியும் பரதநாட்டியத்தில் மிக முக்கியமானது. "திரனா", "தொந்திரனா", "தனனம்" போன்ற சொற்கட்டுக்களை கொண்டிருக்கும் தில்லான பாடும் போது மனோரம்யமாக இருக்கும். இதற்கு நடனமாடுபவரும் இலயித்து ஆட முடியும், எல்லாவற்றையும் மெருகூட்ட வல்லது மிருதங்கம் ஆகும். ஆகவே தில்லானா உருப்படிகளுக்கு ஏற்ப ஜதிக்கோர்வைகளை அழகுற வாசித்தல் வேண்டும். அதே நேரம் பரதநாட்டிய உருப்படிகளுக்கு மிருதங்கம் இசைக்கும் போது தேவையான இடங்களில் தீர்மானம், அறுதி, கொடுத்தல் வேண்டும். அப்போது தான் பல்லவியை அடுத்து வரும் அனுபல்லவியோ, சரணமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கவும் இசை இலக்கண ஒழுங்கிற்கமைய கலைஞர்களுக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் அமையும். ஆகவே பரத நாட்டிய நிகழ்வை மெருகூட்டவும் உருப்படிகளை தக்க முறையில் இரசிகர்களுக்கு வழங்கவும் மிருதங்கம் பெரும் பங்கு வகிக்கின்றது.

திருக்கோணமலையில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக "இராஜரெட்ணம் நடனாலயம்" ஊடாக பரதநாட்டியத்தை திறம்பட வளர்த்துக்கொண்டு செல்வதில் ஆசிரியை திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் முன்னணி வகிக்கின்றார். சுமார் 35 வருடங்களாக மிருதங்கம் இசைத்தும் கற்பித்தும் வருகின்ற நான் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்களுடைய எல்லா நடன ஆற்றுகைகளுக்கும் மிருதங்கம் இசைத்து வருகின்றேன்.

மிருதங்ககாரர் லயத்தைப் பேண மிருதங்கம் இசைத்தாலும் நட்டுவாங்கக்காரரும் லயத்தைப் பேணுபவராக இருப்பதோடு நட்டுவாங்கம் செய்யும் திறமையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். அந்த வகையில் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள் நல்ல லயப்பிடிப்புடன் நட்டுவாங்கத் திறமையோடு மட்டுமல்லாது நடன உருப்படிகளை நன்றே கற்பிப்பவராகவும் இருக்கிறார். இவருடைய நட்டுவாங்கம் பாடகருக்கும் மிருதங்கம் இசைப்பவருக்கும் நடனம் செய்பவருக்கும் நன்கு ஒத்துழைப்புத் தரும்.

"இராஜரெட்ணம் நடனாலயம்" ஆரம்பித்து 25 வருடத்தை பூர்த்தி செய்யும் முகமாக "அபிநய லாவண்யா" எனும் நிகழ்வை நடாத்தும் திருமதி. ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்களையும் இந்நிகழ்வில் பங்குபற்றுகின்ற மாணவிகளுக்கும் அவர்களோடு ஒத்துழைப்பு நல்குகின்ற பெற்றோர்களுக்கும் இந்நிகழ்வு சிறப்புற நடந்தேற எல்லாம் வல்ல கோணேசப்பெருமான் அருள் வேண்டி "சின்னவள்ளி மிருதங்க கலாமன்றம்" சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"சாமஸ்ரீ தேசமான்ய", "கலாசரஸ்வதி"
"மிருதங்க கலா வித்தகர்"
திருமலை **எஸ்.காண்டீபன்**
**(BSc. Dip in Edu, MSc)**
சின்னவள்ளி மிருதங்க கலாலயம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலைதனில் சிறந்த நாட்டியக் கலைஞர்களில் ஒருவர் திருமதி.ரேணுகாதேவி செல்வப்புத்திரன் அவர்கள், காலத்திற்கு காலம் திருக்கோணமலையில் பல நடன நிகழ்வுகளை அரங்கேற்றியுள்ளார். அவரது "தென்கயிலை வாசா எனும் நாட்டிய நாடக" நிகழ்வானது திருக்கோணமலையின் பரதக்கலை வரலாற்றில் முக்கிய இடம் பெற்றதாகும்.

1993ல் இவரது மாணவியான அபிராமி பற்குணம் அவர்களது அரங்கேற்ற நிகழ்வில் பாடியதிலிருந்து இன்று வரை இவரின் பல அரங்கேற்ற நிகழ்வுகளில் நான் பாடியுள்ளேன். மாணவர்களுக்கான நீண்ட பயிற்சியும் தனித்த கவனமும் இவருக்கு கலையுலகில் வெற்றியைக் கொடுத்துள்ளது.

அந்த வகையில் தற்போது அரங்கேறும் "அபிநய லாவண்யா" நிகழ்வானது அவரினதும் அவரது மாணவர்களினதும் சிறப்பான ஆற்றலை காட்டுவதாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் அவரது சேவை தொடர மாதுமை சமேத கோணேசப்பெருமானின் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி. **பத்மலோஜினி குணராஜசிங்கம்**
சங்கீத கலாவித்தகர்,
ஓய்வு நிலை ஆசிரியை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரதத்தின் தொன்மம்

பரதநாட்டியத்தின் தொன்மம் உண்மையிலேயே இன்று வரை கண்டறியப்படாமலே உள்ளது.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கலை என்ற கருத்து இருந்தாலும் பரத நாட்டிய சாஸ்திரங்களின் முன்னோடி எனக் கருதப்படும் "பரத முனிவரால் எழுதப்பட்ட நாட்டிய சாஸ்திரம் எனும் நூல், கிறிஸ்து பிறப்பதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னதாக எழுதப்பட்டது எனக் கருதப்படுகின்றது.

அதே போல் இந்து மதத்தில் போற்றப்படும் காவியங்களான மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் வரும் பெண் கதாபாத்திரங்களில் ஆங்காங்கே பரதமும் எட்டிப்பார்த்திருக்கிறது.

"கை வரு மகர வீணை தண்ணுமை தழுவித் தாங்க
கைவிழி நயனம் செல்லக் கண்விழி மனமும் செல்ல
ஐய நுண்ணிடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்"

- கம்பர் -

அப்படிப் பார்த்தால் இதன் தொன்மம் அளவிட முடியாதது. இருந்தும் அழிந்து கொண்டு போன இந்தக் கலையை மீட்டெடுத்த பெருமை 18ம் மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தேவதாசிகளுக்கும், தஞ்சை நால்வர்களுக்கு அதே போன்று பிரிட்டிஸ் ராஜ் காலப்பகுதியில் இந்தியாவில் வாழ்ந்த இ.கிருஷ்ண ஐயர் மற்றும் ஸ்ரீமதி ருக்குமணி தேவி அருண்டேல் போன்ற மூத்த கலைஞர்களையே பெரிதும் சார்ந்துள்ளது.

"இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கும், அதன் விடுதலைக்கும் நாட்டியம் பெரும் பங்கு வகித்ததை இன்று எத்தனை பேர் அறிவீர்கள்?" இந்திய சுதந்திரப் போராளிகளையும் போராட்டங்களையும் வெறுத்த பிரித்தானியர்கள் இந்தியாவில் ரசித்த ஒரே ஒரு விடயம் அக் காலத்தில் அரங்கேற்றப்பட்ட நாட்டிய கலை நிகழ்ச்சிகளை மட்டுமே தான்.

இதை நன்கு அறிந்து கொண்ட கிருஷ்ண ஐயர் அக்கால கட்ட சுதந்திரப் போராளிகளுக்கு பரதநாட்டியத்தைக் கற்றுக் கொண்டு அதன் மூலம் சுதந்திர வேட்கையோடு திரிந்து கொண்டிருந்த இளைஞர்களை பரதநாட்டியத்தின் மூலம் பதப்படுத்தி பிரித்தானியர்களை வென்று கொள்ளும் சூட்சுமத்தையும் கற்றுக் கொடுத்தார் என்பது வரலாற்றுப் பதிவு.

கலாஷேத்திராவின் ஸ்தாபகரும் பரதநாட்டியத்தை ஆண்களுக்கும் கற்றுக் கொடுத்த பெருமை ஸ்ரீமதி ருக்குமணி அருண்டேலைச் சார்ந்தது. என்றாலும் அதே நாட்டியத்துக்கு சமூக ரீதியான அங்கீகாரத்ததையும் அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்த பெருமை கிருஷ்ண ஐயர் அவர்களையே சாரும். ஆனால் துரதிஸ்ட வசமாக அவர்களின் சீடர்களாக இருக்கும் பாக்கியம் எம்மவர்களுக்கு கிட்டவில்லை. இருந்தும் இவர்களைப் போன்ற பரதநாட்டிய ஜாம்பவான்களின் பிரதிவிம்பங்களாக இருக்கும் கலைஞர்கள் எமக்கு வழிகாட்டியாக இருப்பது எங்கள் பாக்கியமே.

பாரத கலாச்சாரத்தில் சூடாமணியாக ஒளி வீசுவது நாட்டியக் கலை. இது காலத்தால் மூத்ததும் இளமை குன்றாத சிறப்புத் தன்மை வாய்ந்ததும் ஆகும்.

**இரா. மகேந்திரராஜா**
பிருந்தாவனம் கல்யாண மண்டபம்
திருகோணமலை.

"பண்ணால் சொல்லும் பொருளைப் பாவ ராக தாளத்தோடு
கண்ணால் காட்டும் கலையே நடனக் கலை"
- உடுமலை நாராயணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வில் பங்கேற்கும் அணி இசைக் கலைஞர்கள்




**நட்டுவாங்கம்**
திருமதி. **ரேணுகாதேவி செல்வபுத்திரன்**
நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி,
இசை நடன நவரத்னா, அபிநய ஆசான்
(Dip. in Dance, Dip. in Edu.)




கலாவித்தகர்
செல்வன். **அழகேசன் அமிர்தலோஜனன்**
(B.Sc in Agri.tech & mgt)




இசைமணி
செல்வன். **அழகேசன் அமிர்தசிந்துஜன்**
(B.FA in Carnatic Music)




கலைமாணி
திருமதி. **கனேஸ்வரி ஸ்ரீநிவாசன்**




" சாம ஸ்ரீ தேசமான்ய", "கலா சரஸ்வதி"
"மிருதங்க கலா வித்தகர்"
திருமலை. **சி.காண்டீபன்**
(B.Sc, Dip. in Edu., M.Sc.)




ஸ்ருதி வேந்தன்
திரு. **அம்பலவாணர் ஜெயராமன்**




சங்கீத வித்துவான்
செல்வன். **N.S.வாகீசன்**




Professional Flutist
**Dinanjana Kulasinghe** (BA,Visharada)




திரு. **விநாயகமூர்த்தி செந்தூரன்**
Music Director & Leader of Asians orchestra




திரு. **சந்தானம் ஆனந்தராஜ்**
Persuasion and Special Effect




திரு.**ரட்ணம் ரட்ணதுரை**
Visharada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றியுரை

இரவில் வானில் தோன்றும் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களின் பெறுமதிகளைக் காட்டிலும் அவ்வப்போது தோன்றி மறையும் "வால் வெள்ளிகளுக்கு" என்றுமே ஒரு தனி மதிப்பு உண்டு.

இவ்வுலகில் வாழும் பல்லாயிரக் கணக்கான மானிடர்களுக்கு மத்தியில் கலைஞர்களாக, அதிலும் தமிழ் மொழி சார்ந்த பரதக் கலைஞர்களாக வாழ்வது என்பது அந்த வால் வெள்ளிகளின் மதிப்புக்கு நிகரானது.

ஏனெனில் ஒரு ஏழையாகப் பிறந்தவன் பணக்காரனாக இறக்க முடியும். ஒரு விவசாயியின் மகன் விஞ்ஞானியாக முடியும். ஆனால் ஒரு மனிதன் கலைஞனாக வேண்டுமென்றால் அவன் அந்த இறைவனிடம் இருந்து நேரடியாக வரம் பெற்று பிறந்திருக்க வேண்டும்.

எவராலும் எதுவாகவும் ஆகமுடியும். ஆனால் எவராலும் ஒரு உன்னத கலைஞனாக வாழ்வது என்பது சாத்தியமான விடயமல்ல.

"அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது" என்ற ஔவைப்பாட்டியின் வாசகத்தின் முழுப்பெறுமதியை ரசித்துப் பார்க்க வேண்டுமென்றால் நீங்கள் ஒரு கலைஞனாக வாழ்ந்திருந்தால் மட்டுமே அது சாத்தியம்.

அந்த சாத்தியங்களை வரங்களாக பெற்றவர்கள் என்ற இறுமாப்புடனும் பரத முனிவரின் வம்சாவழியினர் என்ற பெருமிதத்துடன் கிட்டத்தட்ட கடந்த இருபத்தைந்து வருடங்களாக தெய்வீக சிறப்புப் பெற்ற இந்த நாட்டியக் கலையை திருக்கோணநாதர் உறையும் இப் புண்ணிய பூமியில் இளம் மாணவர்களுக்கு கற்பிக்கும் சேவையை நல்கிவரும் எமது இராஜரெட்ணம் நடனாலயத்தின் 25வது ஆண்டு விழாவினை முன்னிட்டு "அபிநய லாவண்யா" என்ற மலரினை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ் இதழுக்கு அனைத்து வாழ்த்துச் செய்திகளையும்,ஆசிகளையும் வழங்கிய அனைத்து கலை உள்ளங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இந்த அபிநய லாவண்யாவிற்கு அனைத்து லாவண்ணியங்களையும் சேர்த்த அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

சீனப் புரட்சியாளரான "மாசேதுங்" கூறியது போல "கலையும் இலக்கியமும் தான் ஒரு கலாச்சாரத்தின் கண்ணாடிகள். பொழுதை போக்குவது மட்டும் கலையல்ல, பொழுதுகளை பொருள் உள்ளதாக ஆக்குவதே அதன் பணி." அதற்கிணங்க உங்கள் பொழுதுகளையும் அபிநய லாவண்யா பொருள் உள்ளதாக ஆக்கியிருக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த சிறப்பு மலரினை உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

நாட்டியக்கலைமணி, நாட்டிய வித்தகி
திருமதி.**ரேணுகாதேவி செல்வப்புத்திரன்**
இராஜரெட்ணம் நடனாலய ஸ்தாபகர்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வல்லவராம் கடவுள் எனக்கு
அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார்

லூக் 1:48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரத நாட்டியம் பற்றிய சில நூல்கள்





A Time to Dance (2015)
by Padma Venkatraman (Author)




Bharatanatyam (2002)
by Manjula Lusti Narasimhan (Author)





The Sterling Book of Indian
Classical Dances (2004)
by Shovana Narayan (Author)




Bharatanatyam How to:
A Step-by-step Approach to
Learn the Classical Form (2011)
by Eshwar Jayalakshmi





Paadha Bhedhah
Vocabulary of feet Movements
in Bharatanatyam (2012)
by Jayalakshmi Eshwar (Author)





Bharatanatyam: A Reader (2010)
by Davesh Soneji (Author)




Bharata Natyam (2002)
by Sunil Kothari (Author)




Mudras in Bharatanatyam (2011)
by C. Venugopalan Nair (Author)




Bharatanatyam (2002)
by Ashish Mohan Khokar (Author)

## நன்றி

DESIGNED & PRINTED BY SARAVANA PRINTERS. TEL: 026 2227079

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org